413
4.53

REGISTERED No. M. 6165. அணா 2

413

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

நவம்பர் 1953.

விஷயம்.			பக்கம்.
மாணவ வாழ்க்கையின் முக்கியத்துவம் (எஸ். எஸ். அலாவுதீன்)	....	....	1
மாயமாய் மறைந்த மங்கை	(தொடர் கதை)		5
ஐங்காலக் கடமை (வேளாங்கண்ணி-சாந்திதாஸன்)		....	18
நல்லுபதேசம் (அய்யம்பேட்டை எஸ். அப்துர் ரஜாக் ஸாஹிப்)			19
இன்றே செயலில் வேண்டும்	....	....	23
மரண அவஸ்தை	....	....	25
ஸிராஜுஸ் ஸாலிகீன்	....	....	27
சிறு கதை	....	....	32

பத்ஹுல் இஸ்லாம் ஆபீஸ் :
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்:	இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு	
	வருஷ சந்தா	ரூ. 1-8-0
	தனிப் பிரதி	அணா. 2
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா		ரூ. 2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

சைதத்துப் படைப்போர்
வசன காவியம்.

இது ஹஜ்றத் அமீறுல் முஃமினீன் அபூபக்கர் ஸித்திக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர்ஸுபியான் என்னும் ஒரு அரசனோடு வெகு சாமர்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்தவை கலியாணஞ் செய்து மதினத்திற்கு வந்தது முதலிய விஷயங்கள் நிறம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமாயிருக்கும். இதைப்பற்றி நிறம்பச் சொல்ல வேண்டியதில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூசாப்புலவர் அவர்களால் செய்துள்ள செய்யிதத்துப் படைப்போர் என்னும் காவியத்தை வசனரூபமாகச் செய்யப்பட்டது.

வசனம் விலை அணா. 15 ஷை பாடல் விலை அணா. 12

கிடைக்குமிடம்,—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்.

நவம்பர்—1953.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1953

மாணவ வாழ்க்கையின் முக்கியத்துவம்.

(எஸ். எஸ். அலாவுதீன்.)

ஓர் திறமையான குடியானவனைப் பார்! அவன் எவ்வளவு முன் கருதல்களுடனும் விடாமுயற்சியுடனும் தனது வேலையைச் செய்கிறான். முதலாவதாக, தனது மனதிற்குப் பிடித்த விளையக்கூடிய நிலத்தை தேர்ந்தெடுக்கிறான். பிறகு அந்த நிலத்தை நன்றாக உழுது, பக்குவமான முறையில் உரம் சேர்க்கிறான். பின்னர் விதைக்கிறான். விதை முளைத்து மேலெழுந்தவுடன், அதற்கு வேண்டிய தண்ணீர் விடுவதும், கொஞ்ச காலங் கழிந்த பிறகு பயிர்களின் வளர்ச்சியை பாதிக்கக்கூடிய களைகளையும் பறித்தெறிகிறான். இப்படியாக அந்த விளைவைக் கொய்தெடுக்கும் வரை இடையிடையே வேண்டுவன செய்கிறான். இங்ஙனம் விடா முயற்சியுடன் வேலை செய்து கொண்டிருப்பதால் தான், அதன் விளைவு மற்றவர்களை விடப் பன்மடங்காகக் காணப்படுகிறது.

எந்த வேலையில் ஈடுபட்டிருப்போருக்கும் அந்த வேலையின் நியாயமான நிருவாகத்திற்கு இப்படியாகச் சில முன் ஜாக்கிரதைகள் அவசியம் வேண்டும். வாணிகத்திலோ, அன்றி கைத்தொழிலிலோ இது போன்ற முன்னேற்பாடுகள் இன்றியமையாததாகும். இதே போன்று நமது திறமைகளையும், நம்மிட மிருந்து ஒளிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சில சக்திகளையும் மெருகு படுத்தி, நம்மை உன்னத மனிதர்களாக்கவும் முன்னமேயே சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியுளது. இந்த முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டியதும், அதற்கான பெயர்களைச் சம்பாதிக்க வேண்டியதும் மாணவ வாழ்க்கையில் தான் முடியும். மாணவ வாழ்க்கை எதிர்கால வாழ்வைச் சீர்படுத்தக் கூடிய ஒரு முக்கியமான கட்டம். நமது எதிர்காலம் பிரகாசமாகத் திகழ்வதற்கும், நேர்மாறாக

மங்கி மறைவதற்கும், இந்தப் பிரதான காலத்தை நாம் உபயோகித்துக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

மாணவ வாழ்க்கைக்குப் பிரத்தியேக மகத்துவங்களும் முக்கியத் துவங்களு முண்டு. இவை மானிட வாழ்க்கையின் மற்ற காலங்களில் நிகழாதவைகளாகும். ஒரு விஷயத்தை நன்றாக ஊன்றி அறிந்து கொள்ளக் கூடியதொரு உன்னத காலம் மாணவ வாழ்க்கை. இந்தக் காலத்தில், விஷயங்களை உடனுக்குடன் அறிவதுடன், அறிந்து விட்டால் பிறகு அது நம்மை விட்டு நீங்காது நிலை கொள்ளக் கூடியதுமாகும். சிறுவனாக இருக்கும் போது படித்த பாட்டுக்களும், கேட்ட கதைகளும் வயது முதிர்ந்த காலத்தில் கூட மறக்க முடியாத தொன்றாகும். நேர் மாறாக, வயது வந்த பிறகு படித்த விஷயங்கள் எவையும் இவ்வளவு எளிதாக மனத்தில் பதித்து நினைவில் கொண்டுவர முடியாது; கொண்டு வருவதும் கடினம் !

மாணவ வாழ்க்கை என்றால், அதாவது ஐந்து வயது முதல் 18-20 வயது வரைத்தான், ஒரு மனிதனுக்கு அறிய வேண்டியவைகளை யெல்லாம் அறிவதும், அறிந்தால் பிறகு நினைவில் வைத்துக் கொள் வதும் சுலபமாக முடிகிறது. இந்தக் காலத்தில் படித்த நன்னடத்தை கள் தான் ஒருவனது வாழ்க்கை முழுதும் நிலையாக நின்று நிலவு கிறது. "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று சொல்வதுண் டல்லவா?

இளம் உள்ளங்களை ஒரு நிழற்படக் கருவிக்கு ஒப்பிடலாம். தாங்கள் பார்ப்பதும், காண்பதும், படிப்பதுமான எல்லாவற்றின் நிழலும் இளம் உள்ளங்களில் பதிந்து என்றும் மாய்ந்து போகாதமுறை யில் நிலைத்து நிற்பதுமாகும். இந்த நிழல்களின் வேலையினூடேதான், உன்னதமான, உபயோகமான பலவற்றையும், எதிர் காலத்தில் செய்யக் கூடிய திறமையாளர்களாக மாறுகிறார்கள். நேர்மாறாக, அருவருக்கத் தக்கதும் உபயோக மற்றதுமான காரியங்களைச் செய்ய அவர்களை ஏவி விடுவதும் இந்த நிழல்களின் வேலை தான்.

மாணவர்களின் வளர்ச்சியில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு முக்கியத்துவம் உண்டு மென்பதைக் கூர்மையாகப் பார்த்தால் தெரிய வரும். சில காலங்களில், தங்களைச் சுற்றிக் காணக்கூடிய ஒவ்வொரு விஷயங்களைக் குறித்தும் அவர்கள் அறிய முயலுவார்கள். தங்கள் கேள்விகட்குத் திருப்திகரமான பதில்கள் கிடைக்கும் வரை அதே கேள்விகளைத்தான் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். மற்றும் சில காலங்களில் எவ்வளவு முடியாது காரியங்களாக விருந்தாலும் அவைகளை வெகு சுலபத்தில் அணுகி விடுவார்கள். வேறு சில காலங் களில், மனப்பாடம் செய்ய வேண்டு மென்ற ஆவல் முந்தி நிற்கும்.

220733

இந்தக் காலத்தில் எத்தனை செய்யுட்களை வேண்டுமானாலும் மனப்பாடம் செய்து விடுவார்கள். அப்படிச் செய்வதில் அவர்களுக்கோர் அலாதிப் பிரியம்! இப்படியாகப் பல காலங்களும் மாணவ வாழ்க்கையில், அதுவும் முக்கியமாக அந்த வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் பிரகாசமாகத் திகழ்வதைக் காணலாம். இவைகளெல்லாம் அந்தந்தக் காலங்களில், ஒவ்வொரு மாணவர்களும் எந்த முறையான வழிகளைக் கடைப்பிடித்து செல்கிறார்களென்பதை அறியக் கூடிய சூசகம். ஒரு திறமையான ஆசிரியர் இது போன்ற சூசக அறிவிப்புகளை உணர்ந்து அதற்கேற்ற படி கல்வி போதிக்கிறார். அதே போன்று விவேகமுற்ற தாய் தந்தையர்கள், பிள்ளைகளின் போக்கை அறிந்து அவைகளுக்கு ஊக்கமளிக்கவும் முயலுகிறார்கள். நேர்மாறாக இது போன்ற நற்குணங்களை முளையிலே கிள்ளி யெறியும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தக் கூடிய விவேகமற்ற தாய் தந்தையர்களையும், ஆசிரியர்களையும் நம்மால் காண முடியாது என்று கூறுவதற்கில்லை. இப்படிச் செய்வது, அவர்களுக்கு இளம் உள்ளங்களின் போக்கும், முறையும் தெரியாததே காரணமாகும்.

இவ்வளவும் கூறியதி லிருந்து, மாணவ வாழ்க்கை ஒரு சிலர் எண்ணுவது போல எந்த விதமான உத்திரவாத மற்றதல்ல வென்றும் தான் தோன்றித் தனமாக நடக்க இடங் கொடுப்பதல்ல வென்றும், நேர்மாறாக எதிர் காலத்தை வெற்றி பெறச் செய்யக்கூடிய உபகரணங்களை சம்பாதித்துச் சேர்த்து வைக்கக் கூடியதுமான ஒரு கஷ்டகால மென்றும் தெரிந்திருக்கலாம். மாணவ வாழ்க்கையைத் தவறாக துஷ் பிரயோகம் செய்யக்கூடிய ஒருவனது எதிர் காலம் தோல்வி என்பது தான் மற்றையோர் அனுபவத்தி லிருந்து அறிய வருகிறது. ஒருவனது எதிர் காலம் பிரகாசமானதா, அல்லவா என்பதை அவனது மாணவ வாழ்க்கையி லிருந்து தான் கணக்கிட்டுத் தெரிந்து கொள்ள முடியு மென்பதில் சற்றும் சந்தேகமில்லை. நம்மிடையே பெயர் பெற்ற மகான்களின் மாணவ வாழ்க்கை இதற்கோர் எடுத்துக் காட்டு. அவர்களெல்லாம் உதாரண மாணவர்களாகத் திகழ்ந்தார்கள். மாணவர்கள் அறிய வேண்டியதும், அனுஷ்டிக்க வேண்டியதுமான விஷயங்களை அவர்கள் மாணவ வாழ்க்கையிலே பிரத்தியேக முயற்சி யெடுத்துக் கற்றுக் கொண்டார்கள்.

இவ்வளவும் கூறியதி லிருந்து, வாழ்க்கையின் வெற்றிகளெல்லாம் அசாதாரண மாணவர்களின் சம்பத்து என்றும், சாதாரண மனிதர்களுக்கு அது முடியாதென்றும் தவறாக எண்ணிவிடக் கூடாது. விடா முயற்சி, தன்னம்பிக்கை, நிலையான கொள்கை ஆகியவற்றின் மூலம் உலகில் சாதிக்க முடியாதது வேறொன்றுமில்லை. ஆனால் இந்த நற்குணங்கள் என்றும் குன்றாது நிலைத்து நிற்க வேண்டு மென்பதே எனதவா.

நமது மாணவர்கள் சாதாரணமாக மடியர்களாகக் காணப்படுகிறுர் கள். கஷ்டப்பட்டுப் படிப்ப தென்பது அவர்களுக்கு மிகவும் சங் கடமானது ; எப்படியாவது உடலே அலட்டாது தந்திரமாக வெற்றி பெற வேண்டு மென்பது தான் அவர்களது குறிக்கோளாகக் காணப் படுகிறது,

“வெற்றி வீரர்களாவதற்கான அனுபவம், கட்டுப்பாடு ஆகியவை களைக் கற்க அவர்கள் தயாரில்லே. எதிர்காலத்தில் பெரிய சுகங்களே அனுபவிப்பதற்காக, தற்போது சிறிய சுகங்களே விட்டு விடுவதற்கும் அவர்கள் தயாராவதில்லே! வாழ்க்கையைப் பிரயோஜனப் படுத்துவதற் கான கல்வி, கலாசாரம், நாகரீகம் முதலானவைகளேச் சம்பாதிப்பதற் காகத் தங்களுடைய விநோத வேலேகளேயோ, ஒழிவு நேரங்களேயோ, தியாகம் செய்யவும் அவர்கள் விரும்புவதில்லே. இவை தான் பெரு வாரியான மாணவர்களிடையே காணக்கூடிய முக்கியமான கெட்ட குணங்கள். தியாகத்தி லிருந்தல்லாது, சரியான இன்பத்தை அடைவ தறிதென்று, அவர்கள் அறிய வேண்டி யிருக்கிறது.”

இஸ்வத்து நாச்சியுடைய கிஸ்ஸா.

இது ஷாம் தேசத்தி லிருந்த லாபி றென்னும் ஆலிமு டைய மகள் இஸ்வத்து நாச்சியாரின் சரிதையாகும். இதில் இஸ்வத்து நாச்சியாருக்கும் ஹபீபென்னும் ஒரு பணக்கார வியாபாரிக்கும் நடந்த நிக்காஹுைம், ஹபீ பென்பவர் வெளியூர் சென்றிருக்கும் போது அவருடைய தம்பி இஸ்வத்து நாச்சி யாரை கெடுக்க முயற்சித்ததும், இஸ்வத்து நாச்சியார் தன் கற்பை காப்பாற்றுவதில் பட்ட கஷ்டங்களும், பின் தான் ஆண் உருவ மேற்றுக் கொண்டு செய்த நற்செயல்களும், கடைசியில் தனது கணவரைச் சேர்ந்ததும் மிகவும் விரிவாக விபரிக்கப் பட்டுள்ளன. இதை ஒவ்வொரு முஸ்லிமும், பெண்கள் குறிப் பாகவும் படித்தறிய வேண்டியதவசியம்.

இதன் விலே அணு. 10

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

மாயமாய்

மறைந்த மங்கை.

(தொடர் கதை 4-வது பகுதி)

6-வது அத்தியாயம்.

மயக்க முற்றுக்கிடந்த ஷம்ஸ் தன்னெதிரே நிற்பதைப் பார்த்ததும் அப்படியே பிரமித்து நின்று விட்டான் சாதிர் தடியன். பிறகு சமாளித்தவாறு "நீங்களா! நீங்கள் ஷம்ஸ் அல்லா? நீங்கள் இங்கு எங்கு வந்தீர்கள்?" என்று ஆச்சரியப்பட்டவாறு கேட்டான்.

"இதற்குமுன் என்னை பார்க்காதவாறு பேசுகிறாயே! உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா?"

"உங்களை முன்பே பார்த்தேனு! நான் உங்களை பார்க்கவேயில்லையே. அதிருக்கட்டும் நீங்கள் இப்பொழுது எதற்கு வந்திருக்கிறீர்கள் என்று எங்களுக்கு தெரியாது. அதுவுமல்லாமல் நானும் பிரேஸரும் ஒரு தப்பும் செய்யவில்லை. நாங்கள் பழைய தொழில்களை விட்டுவிட்டு ஒழுங்காக இங்கு வசித்து வருகிறோம். நீங்கள் எங்கள் பழைய வழக்கங்களை ஞாபகமூட்ட வந்திருக்கிறீர்களா?"

"ஆஹா! நீங்கள் உங்கள் பாவங்களையெல்லாம் கழுவி விட்டு பரிசுத்தமாக ஆய்விட்டீர்களோ! எனக்கு தெரியாதே. ஐயோ பாவமே!"

"எங்களைப்பற்றி வீட்டுக்காரிக்கு ஒன்றும் சொல்லாதீர்கள். அவள் வீட்டை விட்டு துரத்திவிடுவாள். நாங்கள் ஒழுங்காக வசித்து வருவதை கெடுக்காதீர்கள்"

"மேரியா விடமா! உங்களைப்பற்றி அவளுக்கு தெரியாமலில்லை அதிருக்கட்டும். இனி வீணான பேச்செல்லாம் வேண்டாம். இந்த கார் யாருடையது சொல்லு"

"ஏன்? என்னுடைய தான்" என்றான் தடியன்.

"உண்மையாக உன்னுடையதா? நம்பரைப்பார்த்து திருடியதா என்று என்னால் சொல்லமுடியாது, நீங்கள் நம்பரை மாற்றியிருக்கக் கூடும்"

"ஷம்ஸ்! நீங்கள் எதற்காக எங்களிடம் இவ்வாறெல்லாம் கேள்விகள் கேட்கவேண்டும்? அதற்கு ஏன் நாங்கள் பதில் சொல்ல வேண்டும்"

என்று சாதிர் தடியன் கோபமாக சொல்லிக் கொண்டே கொஞ்சம் முன் வந்தான்.

"எனக்கு இஷ்டமான கேள்விகளெல்லாம் கேட்பேன். எனக்கு இந்தகாரைப்பற்றி உண்மையான விஷயங்கள் எல்லாம் தெரிய வேண் டும்" என்று ஷம்ஸ் கர்ஜித்தார்.

"காரைப்பற்றிதானே தெரிய வேண்டும்! போக்ஸ்டோனிலேயே ஒரு வியாபாரியிடம் இருந்து வாங்கினேன். இதோ ரஸீத் இருக்கிறது பாருங்கள்"

ஷம்ஸ் அந்த ரசிதை பார்வை செய்து ஒழுங்காக இருக்க அதை திருப்பிக்கொடுத்து "இப்பொழுது இதை எங்கு கொண்டு போ கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இதை எடுத்துக் கொண்டு போகிறோமா! நாங்கள் எங்கும்போக வில்லை இந்த இரவில். நாளை குதிரை பந்தயத்துக்குபோக ஏற்பாடு செய் திருக்கிறோம். அதற்காக கார் ஒழுங்காக இருக்கிறதா என்று இப் பொழுது பரிசோதிக்கிறோம்" என்று சாதிர் பதில் அளித்தான்.

"டேய் சாதிர்! உன் பொய்யைப்பற்றி எனக்கு தெரியாதா? இன்று எங்கேயே போக ஏற்பாடு செய்திருந்தீர்கள். பிறகு நீ பாலில் போட்ட மருந்து என்ன ஒன்றும் செய்யவில்லை யென்று அறிந்ததும் உங்கள் பிளானை மாற்றிவிட்டீர்கள். அதிருக்கட்டும்" என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே கீழே கிடந்த பிரஷை கையில் எடுத்து சாதிர்யிடம் "நீ போகும்பொழுது ஸூஸியின் அறையை தட்டி இதைக் கொடுத்து விட்டுபோ" என்று சொல்லி பிரஷை அவன்மேல் போட்டார். சாதிர் திடீர் என்று போடப்பட்ட அந்த பிரஷை வலது கையால் பிடித்த தையும் ஷம்ஸ் கவனிக்காமலில்லை.

"ஸூஸியா! அவள் ஏன் இதை என்மேல் எறிந்தாள்?"

"உன் முகத்தை பார்த்தால் அவளுக்கு பிடிக்கவில்லை போலும்" என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே தன் அறையை நோக்கிச் சென்றார். தனது அறையில் கதவைபூட்டிய பின் கதவு ஓரமாக ஒரு நாற்காலியையும் கைபிடிக்குப் பக்கத்தில் சாய்த்து வைத்தார். பிறகு விளக்கை அணைத்தபின் ஜன்னல் அருகே வந்து நின்றார். கார் ஸ்டார்ட் செய்யும் சப்தம் கேட்டது. பிறகு கதவுகள் மூடப்படும் சப்தம் கேட்டது. "காரை ஷெட்டில் விட்டு விட்டார்கள் போலிருக் கிறது" என்று நினைத்தார். "இந்த வீட்டிலோ அடுத்த வீட்டிலோ ஏதோ இரகசியம் இருக்கிறது. ரேனிபர்க்கையும் அந்த வீட்டிலி ருந்து இந்த வீட்டுக்கு கொண்டு வந்து அடைத்து வைத்திருக்கிறார் களோ! ஒலிவாவும் அவள் அறியாமல் இதில் சம்மந்தப்படவே அவளை

யும் பிடித்து வைத்திருக்கிறார்களோ! அப்படி வைத்திருந்தால் அவர்கள் இன்றிரவு இங்கிருந்து வேறு இடத்தில் அப்புறப்படுத்த யோசனை செய்து தனக்கு மயக்க மருந்தையும் கொடுத்திருக்கலாம். எதற்கும் இன்று காலைக்குள் இங்கு யாரையும் அடைத்து வைத்திருக்கிறார்களா என்று பார்த்தே தீரவேண்டும்'' என்ற தீர்மானத்துக்கு வந்தார் ஷம்ஸ். சுமார் 30-நிமிஷம் அவ்வறையிலேயே இருந்தார். பிறகு காலில் ரப்பர் பூட்ஸை அணிந்து கொண்டு முன்வருண்டா பக்கம் வந்தார். அங்கிருந்து பக்கத்து வீட்டை நோக்கினார். அங்கு முன் எந்த அறையிலிருந்து பிரஷ் எறியப்பட்டதோ அவ்வறையில் விளக்கு எறிந்து கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரிய முற்றார். இவ்வீட்டிற்கும் அடுத்த வீட்டு வராண்டாவுக்கும் இடையில் 4 அடி தூரம் இருந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஸுஸியின் அறையிலுள்ள விளக்கு அணையப்பட்டதைக் கவனித்தார். தன்னுடைய கையிலுள்ள கடியாரத்தில் டைம் பார்த்தார். அங்கேயே 20 நிமிஷம் நின்று கொண்டிருந்தார். இதற்குள் ஸுஸியும் தூங்கி யிருக்கக்கூடுமென்று நினைத்து, தானிருக்கும் வீட்டின் சுவற்றில் மழை தண்ணீர் குழாய் யிருப்பதைப் பார்த்து, வராண்டாவின் சுவற்றின் வெளி பக்கத்திலுள்ள தடையில் நின்று கொண்டு மழை தண்ணீர் குழாயை ஒரு கையால் பிடித்தார். அங்கிருந்து 4 அடி தூரத்திலுள்ள பக்கத்து வீட்டு வராண்டாவின் வெளி தடைக்கு குதித்து அங்கு யிருக்கும் மழைதண்ணீர் குழாயை பிடித்து நின்றார். தான் குதித்ததை யாரும் பார்த்திருப்பார்களா? வென்று அப்படியே அசையாம லிருந்தார் கொஞ்ச நேரம். யாரும் கவனிக்கவில்லை யென்றறிந்த பின்னர் அங்கிருந்து அந்த வீட்டு வராண்டாவுக்குப் போய், சப்தமிடாமல் ஸுஸி அறையைக் கடந்து பக்கத்து அறையினருகே போனார்.

ஸுஸி அறையை வராண்டாவில் நடந்து கடக்கும்போது ஜன்னல் வழியாக அந்த அறையையும் நோக்கினார். ஒரு பெண்ணுக்கு வேண்டிய சாமான்களாக அவ்வறையினுள் இருப்பதை நிலா வெளிச்சத்தில் பார்த்தார். பக்கத்து அறையின் ஜன்னல் கதவை திறந்து அதனுள் சென்றார். படிக்கட்டு பக்கத்தில் வந்தார். அங்கு நின்று கவனித்தார். தானிருக்கும் மேல் மெத்தையில் யாரோ தூக்கத்தில் உறக்க குறட்டை சப்தமிடுவதைக் கேட்டார். வேறொரு சப்தமு மில்லாமல் நிசப்தத்தில் இந்த குறட்டை சப்தம் உறக்க கேட்பதாக தோன்றியது. அங்கிருந்து படிகட்டின் வழியாக கீழிறங்கி அங்குள்ள அறைகளை ஒவ்வொன்றாய் இருட்டில் கவனித்தார். சில இடங்களில் தன்னிடமுள்ள சிறிய டார்ச்சையும் உபயோகித்துப் பார்த்தார். கீழே ஒருவரும் வசிக்கவில்லை. அங்கிருந்து படிகள் மூலம் மெத்தைக்கு வந்தார். ஸுஸி யிருக்கும் இரு அறைகளை விட்டு விட்டு, இன்னொரு அறையைத் திறந்தார்.

அது ஸ்நான அறையாக யிருந்தது. கையிலுள்ள டார்ச் மூலம் அந்த ஸ்நான அறையைக் கவனிக்க, தரையில் டார்ச் வெளிச்சத்தில் பளிச்சென்று ஏதோ பிரகாசமாக கிடப்பதைப் பார்த்தார். அதை எடுத்துப் பார்க்க, அது ஒரு மோதிரத்திலிருக்கும் ஒரு வைர கல்லாக யிருந்தது. அதைப் பார்த்ததும் "அவள் போகும்போது என் வைரக் கற்களுள்ள மோதிரத்தையும் போட்டனுப்பினேன்" என்று ரோஸன் சொல்லியது ஞாபகத்திற்கு வந்தது. "இது ஒலிவா கையிலிருந்த மோதிரத்தினின்றும் விழுந்திருக்குமா? இருக்கலாம். மேரியா விரல்களில் மோதிரமே கிடையாது. ஸூஸி கையில் இரு மோதிரங்களிருந்தாலும் அதில் வைரக் கற்களில்லை" என்றும் நினைத்தார். தான் நினைப்பது சரியானால் ஒலிவா இவ்வீட்டிற்கு வந்தே யிருப்பாள். ஆனால் இவ்விஷயம் மேரியாவுக்கு தெரியாம லிருந்திருக்கும். இவ்வாறெல்லாம் நினைத்துக் கொண்டே அந்த வைரக் கல்லை தனது ஜேபியில் போட்டுக் கொண்டு அவ்வறையைவிட்டு வெளிவந்து இன்னொரு அறையைக் கவனித்தார்.

அவ்வறையின் கதவு கொஞ்சம் திறக்கப் பட்டிருந்தது. யாரோ அவ்வரையில் தூங்குவதாக மூச்சு சப்தம் கேட்டது. அதனுள் புகுந்து பார்த்தார். நிலா வெளிச்சம் அவ்வறையினுள் பிரகாசித்துக் கொண்டிருந்தது. படுக்கையில் ஒரு மனிதன் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அந்த மனிதனை ஷம்ஸ் இற்குமுன் பார்த்ததில்லை. தலையில்கொஞ்சம் நறைத்த மயிரிருந்தது. ஆனால் மீசை கருத்திருந்தது. அவன் தலைகணையின் பேரில் ஒருபூச்சி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். படுத்திருப்பவன் கைவிரல்களில் புளு கலராக தெரிந்தது. இவன் டைப் அடிக்கும் மிஷினில் வேலை செய்பவனாக யிருக்கலாம். பிரொபஸர் சாண்டரின் அஸிஸ்டென்ட் ஜானாக யிருக்கலாமென் றெண்ணி அவ்வறையைவிட்டு வெளிவந்து, இன்னொரு அறையை திறக்கப் பார்த்தார். பூட்டப் பட்டிருந்தது.

அதற்கு பக்கத்து அறையும் பூட்டப்பட்டிருந்தது. இவைகளை பின் கவனிக்கலாமென்று அதற்கு மேலுள்ள மெத்தைக்குப் போனார்.

அங்கு ஒரு அறையில் குறட்டைவிட்டு தூங்குபவன் சாதிர் தடியன் என்பதை அறிந்தார். அதற்கு பக்கத்து அறையிலிருந்து சிகரேட் புகையிலை காரமான நாற்றம் வந்து கொண்டிருந்தது. பிரேசர் எப்பொழுதும் காரமான சிகரேட்டுகளை உபயோகிப்பவன். அந்த அறை பிரேசருடையதென் றெண்ணி மற்ற அறைகளை கவனித்தார். எங்கும் தான் நினைத்தபடி யாரையும் பிடித்து மறைத்து வைத்திருப்பதாக தெரியவில்லை. அங்கிருந்து கீழ் மெத்தைக்கு இறங்கினார்.

மூடப் பட்டிருக்கும் இரு அறைகளையும் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்தார். "என்ன! ஏதோ ஒரு சிறு சப்தம் கேட்டதே!" என்றெண்ணி சுவற்றோரமாக நின்றார். யாரோ தனக்குப் பின்னால் மெது

வாக வந்ததுபோல் தோன்றியது. கையில் துப்பாக்கியை எடுத்தார். ஆனால் இவர் கொஞ்ச நேரம் அப்படியே கூர்ந்து கவனித்தார். ஒரு சப்தத்தையும் காணோம். நமது கெட்ட நினைவாக யிருக்கலாமென் றெண்ணி, தனது ஜேபியிலிருந்து ஒரு ஆயுதத்தை எடுத்து மூடப் பட்டிருக்கும் ஒரு அறையின் கதவை திறந்து வெளியிலேயே நின்றார். உள்ளே நிசப்தமா யிருப்பதை யறிந்து உள்சென்று டார்ச் மூலம் கவ னித்தார். அது ஒரு சிறிய படுக்கை யறையாக யிருந்தது. ஆனால் அறையில் யாருமில்லை. அதைவிட்டு வெளிவந்து அக்கதவை மூடிய பின், மறுஅறைக்குப் போனார்.

அங்கும் கையிலுள்ள ஆயுதத்தை கதவை திறக்க உபயோகித்தார். கதவு திறக்கப் பட்டது. கொஞ்சம் தூரத்திலுள்ள இன்னொரு வீட் டின் அறையில் விளக்கெறிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சம் ஜன்னல் வழியாக இவ்வறையில் விழவே, இங்கு ஷம்ஷ் டார்ச் உப யோகிக்கவில்லை. இங்கும் யாருமில்லை. ஆனால் அநேக கண்ணாடி கேஸ்களில் பூச்சிகளனேக மிருந்தன. இதுவும் பிரபஸர் சாண்டரைச் சேர்ந்தது என்று தீர்மானித்தார். அங்கு மேஜையின் பேரில் ஒரு காகிதத்தில் பூச்சிகளைப்பற்றி ஏதேதோ எழுதி வைத்திருந்தது. இன் னொரு சிறிய மேஜையின்மேல் டைப் அடிக்கும் மிஷின் ஒன்றிருந்தது. அதற்குப் பக்கத்தில் கீழே பழைய டைப் அடிக்கும் ரிப்பன் கிடந்தது. அங்கு சுவற்றில் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று தொங்கிக் கொண் டிருந்தது. அதை தற்செயலாக பார்த்தார். தனக்குப் பின்னால் அறையின் கதவினருகே ஒரு மனிதன் தனது இடது கையை தூக்கிக் கொண்டிருக்க, அந்த கையில் ஒரு கத்தி வைத்திருப்பதையும் பார்த்து உடனே கீழே உட்கார்ந்தார். பின்னாலிருந்து வந்த கத்தி எதிரே தொங்கிக் கொண்டிருந்த ஒரு கடியார கண்ணாடியில் படவே, கண்ணாடி உடைந்து சிதறியது. கடியாரமும் ஷம்ஸ் தலையில் விழுந்தது. உடனே திரும்பிப் பார்த்தார். கதவு பூட்டப்படுகிறது. பாய்ந்து கதவை இழுத்தார். அதற்குள் வெளிப் பக்கத்தில் சாவியால் பூட்டப்பட்டதை யறிந்தார். தனது ஜேபியிலிருந்து ஒரு கொறடாவை எடுத்தார். அறையின் வெளியிலுள்ளவன் இடதுகை உபயோகிக்கும் கொலைபாதகன்-வெஸ்டர்பியைக் கொன்றவன்.

7-வது அத்தியாயம்.

ஷம்ஸ் குறடாவினால் கதவை திறக்க முயற்சித்தார். இதற் கிடையில் அந்த கொலையாளியைப் பற்றி எண்ணினார். அவன் கையில் ஒரு கைகுட்டையு மிருந்தது. விரல்கள் புளு கலராக யிருந்தது. கைரேகை கத்தியிலிரா மலிருக்க கைகுட்டையைக் கையில் வைத்திருக்க லாம் என்று யோசித்துக் கொண்டே கதவை திறந்தார். கொஞ்ச நேரத்தில் திறக்கப்பட்டது. இதற்குள் அவன் ஓடி யிருப்பானோ

அல்லது இருட்டில் இன்னொரு கத்தியை வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருக்கிறானோ. கையில் புளுக்கலர் யிருந்ததால் பிரபஸர் சான்டரின் அஸிஸ்டென்ட் ஜானோ! எதற்கும் ஜானின் அறையைப் பார்க்கலாமென்று கையில் துப்பாக்கியுடன் போய் பார்க்க, அவன் முன் தூங்கிக் கொண்டிருந்த மாதிரியே யிருந்தான். அவன் தலையணையின் பேரில் முன் உட்கார்ந்திருந்தபடி பூச்சியும் அப்படியே யிருந்தது. அவன் இப்பொழுது ஓடிவந்து படுத்திருந்தால், அந்த பூச்சி பறந்திருக்கக் கூடுமே. தன் மேல் கத்தி எறிந்தவனின் கைவிரல்களும் புளுவாக யிருந்ததே. ஆனால் இங்கு ஜான் உண்மையாக நன்றாக தூங்குவதாக தெரிகிறதே! இவ்வெண்ணங்களுடன் ஷம்ஸ் அவ்வறையை விட்டு, கத்தி எறியப்பட்ட அறைக்கு வந்தார்.

அங்கு கிடந்த கத்தியை எடுத்து கைப்பிடியிலும் மற்ற பாகத்திலும் கைரேகை ஏதாவது இருக்கிறதா வென்று பார்த்தார். அதில் ஒன்றும் தெரியவில்லை. இனி தான் அங்கிருப்பது சரியல்ல. தனது அறைக்கு போவதே உத்தமமென்று அங்கிருந்த வராண்டாவுக்கு வந்து முன் வந்தமாதிரி அடுத்த வரண்டாவுக்குத் தாண்டி, தனது அறைக்கு கத்தியுடன் அறையினுள் வந்து கதவை பூட்டி முன் வைத்தது போல், ஒரு நாற்காலியையும் கதவின் கைப்பிடியிலே சாய்த்து வைத்தார். பின்பு படுத்து தூங்கி, காலையில் எழுந்து 8½ மணிக்கு சாப்பாட்டு அறைக்குப் போனார். அங்கிருந்து ஜன்னல் வழியாக பின் தோட்டத்திற்குப் போனார். பக்கத்து வீட்டு பின்புற தோட்டத்திற்கும் இதற்கு மிடையில் சிறிய செடிகள் கொஞ்சம் வரிசையாக யிருந்தன. பக்கத்து தோட்டத்தைக் கவனித்தார். அங்கு ஒரு உயரமான மனிதன் கையில் காலை பத்திரிகையுடன் உலாவிக் கொண்டிருந்தான். அவனது இடது கண்ணில் ஒத்தை கண்ணாடி போட்டிருந்தான். அவன் ஷம்ஸை பார்த்து, "வேலைக்காரி மூலமாக மேரியாவுக்கு சொல்லி யனுப்பினேனே தெரியுமா உங்களுக்கு?"

"நான் இப்பொழுது தான் மெத்தையி லிருந்து கீழிறங்கினேன். எனக்கு ஒன்றும் தெரியாது. என்ன சமாச்சாரம்?"

"என்ன சமாச்சாரமா! என்ன அநியாயம்! இரவெல்லாம் யாரோ விழித்துக் கொண்டு, இவ்வீட்டில் உலாவுகிறார்கள் போல் தெரிகிறது. நான் பூட்டி வைத்திருந்த எனது அறையையும் திறந்திருக்கிறார்கள். காலையில் நான் எப்போதும் தோட்டப் பக்கம் வந்து பத்திரிக்கை பார்ப்பது வழக்கம். இன்று படிக்கவே மனம் வரவேயில்லை. வீட்டுக்காரியும் நான் சொல்லி யனுப்பிய விஷயத்தை விசாரிக்கவாவது என்னிடம் வரவில்லை. நான் ஒழுங்காக பணம் கொடுத்துக் கொண்டு தங்கி யிருப்பவன். என்னை கவனிக்காதிருக்கிறாளே. நாம் ஏன் அப்படிப்பட்ட வீட்டில் தங்க வேண்டும்? இதை விட்டு கிளம்புவது தான் நல்லது"

என்றார். இவர் பிரபஸர் ஸான்டராக யிருக்கு மென்று ஷம்ஸ் நினைத்தார்.

"மேரியா காலை நாஷ்டா தயார் செய்வதில் ஒட்ட ஆட்டமா யிருக் கலாம்." என்று சாந்தமாக ஷம்ஸ் சொல்லி, "யாரோ உங்கள் அறையில் புகுந்தார்களா?" என்றும் கேட்டார். "ஆம் காலையில் என் அறையைப் பார்க்க, கதவில் ஒரு சாவி யிருந்தது. அது வேறு சாவி. எனது சாவி என்னிட மிருக்கிறது. அறையினுள் கடியாரம் கீழே விழுந்து கண்ணாடி உடைந்திருக்கிறது. இரவு அறையை மூடும் போது கடியாரம் ஒழுங் காக யிருந்தது. அந்த கடியாரத்தைப் பற்றி பரவாயில்லை. அது ஒழுங்காய் ஓடுவதில்லை. இருந்தாலும் நான் பிரபஸர் ஸான்டர். நான் பூச்சி கொசு முதலியவைகளைப் பற்றி உட்கார்ந்து படிக்கும் அறையில் இன்னொருவர் பிரவேசிக்க காரணமென்ன வென்று தான் கவலை படுகிறேன்" என்று பிரபஸர் சொன்னார்.

இதற்கிடையில் பிரபஸர் நடக்கும் போது கொஞ்சம் நொண்டுவ தாக பார்த்துக் கொண்டே, ஷம்ஸ் ஒரு சிகரேட்டை எடுத்து உதட்டில் வைத்தார். இதைப் பார்த்த பிரபஸர், "நான் நாஷ்டாவுக்கு முன் சிகரேட் பிடிப்பதில்லை. இருந்தாலும் இப்போது சிகரேட் பிடிக்க வேண்டும் போல் யிருக்கிறது. நான் போய் வருகிறேன்" என்று பிரபஸர் சென்றார். "என் சிகரேட்டைப் பிடியுங்கள். இந்தா இந்த கேஸை பிடியும்" என்று சொல்லி தனது சிகரேட் கேஸை எறிந்தார். பிரபஸர் வலது கையால் அதைப் பிடித்தார். கேஸ் கை தவறிக் கீழே விழுந்தது. "நெருப்பு பெட்டி இருக்கிறதா? சரி." என்று ஷம்ஸ் சொன்னார். பிரபஸர் கேஸை திருப்பிக் கொடுத்த பின், நொண்டிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார். ஷம்ஸூம் தனது 6 நெ. வீட்டிற்குள் நுழைந்து சாப்பாட்டு அறைக்குப் போனார். அங்கு நாஷ்டாவுக்காக அங்கு தங்கியுள்ளவர்க ளெல்லாம் உட்கார்ந் திருந்தார்கள். வேலைக்காரி நாஷ்டா சாமான்களை மேஜையின் பேரில் வைத்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்துக் கொண்டே நின்ற மேரியா, ஷம்ஸைப் பார்த்ததும், அருகே வருமாறு கண் ஜாடை காட்டினாள். ஆனால் அவள் மிக வருத்தமா யிருப்பதை முகக் குறியி னால் அறிந்தார். அவளருகே போய் "என்ன விஷயம்?" என்றார்.

"பிரபஸர் ஸான்டர் விஷயம். ஆனால் அந்த 2 பேரை இவ் வீட்டில் தங்க வைத்ததற்கு இன்னும் என்ன நேறப் போகிறதோ!" என்று வருத்தமாக, மிக மெதுவாக காதில் ஊதினாள்.

"நான் முன்பு எச்சரித்தேனே, அவ்விருவர்களா?"

"ஆம்! பிரபஸர் சான்டர் அறையை யாரோ வேறொரு சாவியால் இரவில் திறந்திருக்கிறார்களாம். அவ்விருவரில் ஒருவனாக யிருக்கக் கூடும்."

"வீட்டில் என்ன நடந்தாலும், அவ்விருவர் பேரில் சந்தேகிப்பது ஒழுங்கல்ல. ஏதாவது திருடு போயிருக்கிறதா ?"

"தனது அறையில் சாமான் ஒன்றும் காணமல் போகவில்லை யென்றும் ஆனல் உள்வந்து உளப்பி யிருக்கிறார்க ளென்றும் பிரபஸர் சொல்கிறார். நாளை அவர்களுக்கு ஒரு வாரத்திற்குள் காலியாகுமாறு நோட்டீஸ் கொடுக்கப் போகிறேன்"

"ஏன் ?"

"திடீரென்று ஏதாவது செய்தால், என் வீட்டின் மதிப்பு போய் விடும். நீங்கள் உங்கள் தொழிலில் இவ்வாறான பேர் வழிகளை சந்தித் திருப்பீர்கள் இருந்தாலும் நீங்கள்......"

"நான்......என்ன ?"

"நான் அவர்களுக்கு காலியாகுமாறு நோட்டீஸ் கொடுக்கும் போது, நீங்களும் என் பக்கத்தி லிருந்தால் நலமென்று நினைக்கிறேன். நானோ ஒரு கிழவி..."

"ஓ! அதற்கென்ன! என்னால் வேண்டிய உதவி செய்ய தயார். இருந்தாலும் நீ கவலை படாதீர். அவர்கள் உன்னை ஒன்றும் செய்ய மாட்டார்கள்." என்று ஷம்ஸ் சொல்லி, நாஷ்டாவுக் காக உட்கார்ந்தார். மேரியாவும் உட்கார்ந்தாள். எல்லோருக்கும் மொத்தமாக வைத்திருப்பவைகளில், எல்லோரும் சாப்பிடுவதையே ஷம்ஸும் சாப்பிட்டார். தனி பிளேட்டுகளில் வைத்திருக்கும் தின் பண்டங்களில் எதையும் ஷம்ஸ் தொடவில்லை. ஏனெனில் தான் கத்தி எறிந்ததில் சாகவில்லை யாதலால், தன்னை எவ்வாறாவது தொலைக்க முயற்சிப்பார்கள். தான் சாப்பிடுவதில் பாஷாணம் கலந்து வைக்க தயங்க மாட்டார்க ளென்று எண்ணினார். இவ்வாறு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, வீட்டின் பின் கார் ஸ்டார்ட் செய்யும் சப்தம் கேட்டது. உடனே ஷம்ஸ் மற்றவர்கள் கவனியாம லிருக்க, சாதாரண மாக எழுந்து ஹாலின் இடது பக்கத்து அறைக்கு வந்து ஜன்னல் வழியாக ஷெட்டை பார்த்தார். காரில் சாதிரும் பிரேசரும் யிருந்தனர். தன்னிடம் அவர்கள் காலையில் குதிரை பந்தயத்திற்கு போவதாக சொன்னபடி வெளியே புறப்படுகிறார்கள். தன்னிடம் சொல்லியது உண்மை யென்று, நிரூபிக்க கிளம்புகிறார்க ளென்று ஷம்ஸ் நினைத்து, தனக்குத் தானே சிறித்தார். கார் வெளியே போனபின், ஷம்ஸ் மறுபடி சாப்பாட்டு அறைக்கு போய், நாஷ்டா வேலையை முடித்தார். அச்சமயத்தில் அங்கு தங்கியிருப்பவர்களில் டாப்பர் என்பவர் எழுந்து, தான் இன்று புறப்படுவதால், சாமான்களை கட்ட வேண்டு மென்று சொல்லி மெத்தைக்குச் சென்றார். மற்றவர்களி லொருவர். "10 நாளைக்கு தங்க வந்தவருக்கு எவ்வளவு சாமான்! ஒரு சிறிய கையில்

தூக்கக் கூடிய பெட்டி, அதை விட பெரிய பெட்டிகள் 2. இன்னும் தூக்க முடியாத கணமுள்ள ஒரு பெட்டி" என்று சொன்னார். "சிலர் எங்கு போவதானாலும் அளவுக்கு மீறிய சாமான்களைக் கொண்டு போவது வழமை. ஆனால் ஓய்வுக்காக வருபவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக சாமான்கள் கொண்டு வருவார்களோ, அது தான் நல்லது" என்று ஷம்ஸ் சொல்லி, இடது பக்கத்து அறைக்கு போய், தினசரி பத்திரிகையை கொஞ்ச நேரம் பார்த்த பின், தனது தொப்பியை மெத்தைக்கு போய் எடுத்து வரலா மென்று ஹாலுக்கு வந்தார். அங்கு மேரியா கையிலுள்ள கடியாரத்தை பார்த்தவாறு "எவ்வளவு நேரமாகிறது. இன்னும் சாமான்கள் கட்டி முடியவில்லையா! டிரெயின் தவறி விடும் போலிருக்கிறது" என்று டாப்பரைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தாள். ஷம்ஸ் அதைக் கேட்டுக் கொண்டே மெத்தைக்கு ஏறலா மென்று படிக்கட்டில் ஏறினார். அச்சமயத்தில் மேல் படிக்கட்டின் அருகே வேலைக்காரி லூஸி, டாப்பரின் பெரிய பெட்டியை தூக்க முயற்சித்தாள். "என்னால் முடியாது. இது மிகவும் கனமாக யிருக்கிறது" என்றாள். அப்பொழுது மெத்தையி லிருந்து டாப்பர் ஓடி வந்து "ஆம் உன்னால் முடியாது. என் முதுகில் ஏற்றி கொண்டு போய் விடுகிறேன்" என்று சொன்னார். கீழே, ஷம்ஸ் கைக்கு மேல் இன்னொரு கை, மெத்தைப் படியின் கைப்பிடியின் மேல் வைத்து அழுத்துப்பட்டதைக் கவனித்து, திரும்பி பார்த்தார்.

ஸூஸி தான் நிற்கும் படிக்கட்டின் கீழ் படிக்கட்டில் நிற்பதைக் கவனித்தார். அவள் முகத்தைப் பார்த்ததும், ஷம்ஸுக்கு ஏதோ அவள் பார்வையில் பயமிருப்பதாக தோன்றியது. அதே சமயத்தில் நோக்க, மேலே லூஸி சப்தமிட்டாள். அவள் அந்த பெரிய பெட்டியைத் தூக்கி டாப்பர் முதுகில் வைக்க முயற்சிக்கும் போது, கனத்தால் அப்பெட்டி வழுக்கி விழுந்தது. படிக்கட்டில் உருண்டு ஷம்ஸுக்கு நேராக வந்தது. அதைப் பார்த்து ஷம்ஸ் நகர்ந்து கைப்பிடி ஓரத்தில் ஒதுங்கினார். பெட்டி கீழே விழுந்தது. மாப்படிகட்டுகள் சில ஒடிந்தன. கீழே விரித்திருந்த ஜம்காளம் கிழியப்பட்டது. இதைப் பார்த்த கீழ் ஹாலில் நின்று கொண்டிருந்த மேரியா அலறினாள். மேலிருந்த டாப்பர் ஷம்ஸிடம் ஓடி வந்து, "உங்களுக்கு ஒன்றும் அடி படவில்லையே! நல்லதாயிற்று" என்றார். டாப்பரை ஷம்ஸ் கூர்ந்து கவனித்தார். உண்மையாகவே தனக்கு அபாயம் வராததைப் பற்றி டாப்பர் சந்தோஷப்படுவதாக தோன்றியது.

"அந்த லூஸி எப்பொழுதும் அஜாக்கிரதை. எவ்வளவு சாமான்களை உடைத்திருக்கிறாள்" என்று மேரியா சொல்லிக் கொண்டே, ஷம்ஸைப் பார்த்து "தற்போது அவளால் தங்கள் உயிருக்கு ஆபத்து! நல்ல வேளையாக தப்பித்தீர்கள். அவளை வைத்து என்னால் சமாளிக்க முடியாது. அவள் போக வேண்டியது தான்" என்றாள்.

"வேண்டாம், ஏதோ தவறுதல் ஏற்படுவது சகஜம்தான்" என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே, ஸூஸியைப் பார்த்தார். அவளைக் காணோம். மெத்தையில் மேல் படிகட்டினருகே மற்ற சிறு பெட்டிகளின் ஒன்றின்மேல் லூஸி உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். ஷம்ஸ் அவளினருகேபோய் "அழுகாதே! இப்பொழுது முடியா விட்டால், மறுமுறை சரியாகிவிடும்" என்று சொல்லி தனது அறைக்குப் போனார். லூஸி அதைக் கேட்டதும், தன் அழுகையை நிறுத்தி ஷம்ஸ் போவதை கோபமாக பார்த்தாள். ஷம்ஸ் அதைக் கவனிக்காமல் "இரண்டாவது முயற்சியும் தவறிவிட்டது. இனி மூன்ருவதிருக்கும். அதிலும் தப்பித்தல் மிக கஷ்டம்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டே நடந்தார்.

ஷம்ஸ், சோடே, லண்டன் போலீஸ் இன்ஸ்பெக்டர் தாமஸ் மூவரும் வெஸ்டர்பி கொலை விசாரணை கூட்டத்திற்காக, போகிறார்கள்.

"இதுவரை ஒன்றும் கண்டிபிடிக்க முடியவில்லை. ஜான்ஸன் பணம் வைத்திருந்த பாங்க்கில் விசாரித்தோம். அவன் அமெரிக்காவிலுள்ள பெரிய வியாபாரிகளிடமிருந்து தன்னைப்பற்றி கடிதங்கள் கொண்டுவந்து அதைக் காண்பித்து பாங்கில் 5000 பவுண்டு போட்டு கணக்கு திறந்தானும். அந்த கடிதங்களைப்பற்றி அமெரிக்காவில் தந்தி மூலம் விசாரித்ததில் அக்கடிதங்களெல்லாம் பொய் கடிதங்களாம். அதைப் போல் கடிதங்கள் யாரும் எழுதி ஜான்ஸன் என்பவனுக்கு கொடுக்க வில்லையாம். பாங்கில் போடப்பட்ட 5000 பவுண்டும் குறைந்து கொண்டே வந்ததாம். கடைசியாக இருந்த கொஞ்ச பணத்தையும் சென்ற திங்கட்கிழமை வாங்கப்பட்டு, கணக்கு முடிக்கப் பட்டதாம். அவன் யாரென்று தெரியவில்லையே. நீங்கள் ஏதும் கண்டு பிடித்தீர்களா?" என்று தாமஸ் கேட்டார்.

"இதுவரை ஒன்றும் கண்டு பிடிக்கவில்லை. கண்டுபிடிக்கக் கூடுமென்னும் நோக்கத்துடன் தான் யிருக்கிறேன்" என்று ஷம்ஸ் பதிலளித்தார்.

வெஸ்டர்பி கொலை விசாரணை கூட்டத்தில் போலீஸ் டாக்டரிடம் வெஸ்டர்பி உடம்பை பரிசோதனை செய்ததைப் பற்றி கேட்கப்பட்டது. ஷம்ஸ், சோடேயிடம் எங்கு, எவ்வாறு வெஸ்டர்பி உடம்பை கண்டு பிடித்தார்களென்றும் கேட்கப் பட்டபின், அவ்விசாரணைக் கூட்டத்து தலைவர் வாய்தா போட்டு விசாரணை தள்ளி வைக்கப்பட்டது. ஷம்ஸ் அக்கூட்டத்திற்கு வந்தவர்களை எல்லாம் கவனித்தார். தானிருக்கும் 6 நெ வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வழமையாக தங்குபவர்களுள் ஒருவன், சுமார் 30 வயதுடையவன், அக்கூட்டத்தில் வந்திருந்ததைக் கவனித்தார். "டொனல்ட் என்று பிளான் எழுதுபவனொருவன் தங்கிருப்பதாக மேரியா சொன்னளே, அவனுக இருக்கக்கூடும் என்றும் இவன்

கொலை கூட்டத்தைச் சேர்ந்தவனு?" என்றும் யோசித்தார். சோடேவினருகே போய், "அதோ புளு டை போட்டவனிருக்கிறனே, அவனறியாமல் அவனைப் பின்தொடர்ந்து கவனி. அவன் இடது கையை உபயோகிப்பவனு என்றும் பார்" என்று காதில் மெதுவாக சொன்னுர். சோடே உடனே அங்கிருந்து கிளம்பி விட்டான். ஷம்ஸ் அதிக நேரம் போலீஸ் இன்ஸ்பெக்டர்களுடனேயே யிருந்தார். பின்பு பெஸ்ட் ஹோட்டலுக்குப் போனுர். அங்கு சோடே யிருந்தான்.

"அவன் பெயர் டொனுல்ட். அவன் கிராப் வெட்டிக் கொள்ளப் போனுன். அங்கு அம்பட்டனுடன் பேசும்போது அவன் பெயரை அறிந்தேன். அவன் தொப்பியை கழட்டும்போது வலது கையால் கழட்டினுன். ஏதோ குதிரை பெயர் ஒரு காகிதத்தில் எழுதி அம்பட்டனுக்கு கொடுத்தான். வலது கையாலேயே எழுதினுன். கடைசியில் பணம் எடுக்கும் போதும், வலது கையால் எடுத்துக் கொடுத்தான். அங்கிருந்து 6 நெ வீட்டிற்கு பக்கத்திலுள்ள 8 நெ வீட்டிற்கு போனுன். இனி அவ்வீட்டின் வெளியில் காத்துக் கொண்டிருப்பது சரியல்லவென்று, திரும்பிவிட்டேன்" என்று சோடே சொன்னுன்.

"அப்படியானுல், வெஸ்டர்பியை கொலை செய்தவன் அவனல்ல. சரி, நீ இங்கேயேயிரு. தேவைப் படும்பொழுது கூப்பிடுகிறேன்" என்று ஷம்ஸ் சொல்லி, அங்கிருந்து புறப்பட்டார். நடந்துகொண்டே ஸூஸியைப்பற்றி நினைத்தார். ஒரு தெருவழியாக வரும்போது, அங்கு ஒரு கடையிலிருந்து தற்செயலாக வெளிவந்தாள் ஸூஸி. அவள் ஷம்ஸ் வருவதைப் பார்த்ததும் "ஏது, இங்கு உலாவிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"தற்செயலாக இவ்வழியாக வந்தேன். அதிருக்கட்டும், நான் காலையில் படிக்கட்டில் ஏறும்போது, என்னைக் கவனித்ததற்காக எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றுர் ஷம்ஸ்.

"திடீரென்று எனது மனதில் தங்களுக்கு ஏதோ ஆபத்து வருவது போல் தெரியவே தங்கள் கையைத் தொட்டேன்."

"நீ நினைத்தவாறும் நேர்ந்தது. சரி இன்று மத்தியான சாப்பாடு பெஸ்ட் ஹோட்டலுக்குப் போய் சாப்பிடலா மென்றிருக்கிறேன். நீயும் வா. இருவரும் சாப்பிடலாம்" என்றுர்.. ஸூஸி இதைக் கேட்டதும் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தயங்கி, அத்தெருவில் நடமாடும் ஜனங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"ஏன் தயங்குகிறுய்? மாட்டேனென்று சொல்லாமல் வா. அந்த ஹோட்டலில் கஸ்டாவ் என்பவன் கொடுக்கும் அருமையான சாப்பாட்டை தின்றபின் சொல்வாய். அந்த சாப்பாட்டை மறக்கவே மாட்டாய்" என்று சொல்லியவாறு கையைப் பிடித்திழுத்தார். ஸூஸி

அங்கு நடமாடும் ஜனங்களை இன்னொரு முறை கூர்ந்து பார்த்தபின் ஷம்ஸுடன் பெஸ்ட் ஹோட்டலுக்கு போனாள். அங்கு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, ஷம்ஸ் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். அவளும் சாதாரணமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தாலும், அவள் முகத்தில் பயம் தாண்டவமாடியதை ஷம்ஸ் கவனிக்காமலில்லை. சாப்பிட்டு முடிந்ததும் ஷம்ஸ், "சரி இனியாகிலும் நாமிருவரும் ஒருவரை யொருவர் அறிந்து கொள்வது நல்லதல்லவா?" என்று கேட்டார்.

"என்ன? அறிந்து கொள்வதா! மிஸ்டர் ரோஸன்! நீங்கள் சொல்வதே எனக்கு புரியவில்லையே"

"என்னை ஏன் ஷம்ஸ் என்று கூப்பிடக்கூடாது? உன்னை 8 நெ வீட்டிலிருந்து, சாதிர், பிரேஸர் அல்லது வேறு யாரோ 6 நெ வீட்டிற்கு அனுப்பி, என்னுடன் பழகியிருக்குமாறு சொன்னதிலிருந்து, நான் ஷம்ஸ் என்று உனக்கு தெரியுமல்லவா?"

"அவ்வளவும் பொய். நீங்கள் என்ன சொல்லுகின்றீர்களென்றே தெரியவில்லை. நீங்கள் வேறு பெயர் வைத்துக் கொண்டு அவ்வீட்டில் தங்கியிருந்தால் நான்..........."

"நீ நடிப்பதில் படா கெட்டிக்காரி. ஆனால் ஒன்றிரண்டு விஷயங்களில் என்னை ஏமாற்ற முடியாமலாய்விட்டது. உனது உண்மையான பெயர் ஸூஸி தான். நீ அமெரிக்காவிலுள்ளவள். அங்கு ஒரு நைட் கிளப்பில் சேர்ந்தவள். எப்பொழுதும் ஏதாவது திருட்டுக் கூட்டத்திற்கு தலைவனை, நீ காதலனாக வைத்துக் கொள்வாய். உன்னை கடைசி முறையாக நான் பார்த்தது நியூயார்க் ஊரில் அஸ்டோரியா கிளப்பில். நான் ஒருமுறை பார்த்தமுகத்தை மறப்பதேயில்லை" என்று மெதுமெதுவாக சொன்னார். அதற்கு ஸூஸியால் ஒன்றுமே பதில் சொல்ல முடியாமல் கொஞ்சநேரம் முன் இருந்த மேஜையை பார்த்தவாறிருந்தாள்.

"பிறகு சரி அப்படியே நீங்கள்சொல்வதெல்லாம் உண்மை யென்று நான் ஆமோதித்தாலும், தற்போது நான் யாதொரு குற்றமும் செய்யவில்லை, உன்னாலும், உனது போலீஸாலும் என்னை என்ன செய்ய முடியும்?" என்றாள்.

"தற்போது உன்னை ஒன்றும் செய்ய முடியாதுதான். நானோ துப்பறிபவன். எனக்கு யார் யார்பேரில் சந்தேக மிருக்கிறதோ அவர்களை யெல்லாம் பிடித்து உடனே சிறை செய்யும் வழமை என்னுடையதல்ல. உனக்கு என்னால் வேண்டிய உதவியை செய்யலா மென்னும் நோக்கத்துடன் உன்னுடன் பேசுகிறேன்"

"எனக்கு யாதொரு உதவியும் தேவையென்று நினைக்கவேயில்லை" என்று மனதை தைரியப் படுத்தியவாறு பதிலளித்தாள்.

அதற்கு ஷம்ஸ் சிறிது பொறுமையை இழந்தவாறு "அப்படியானல் உன்னைப் போல் முட்டாளே கிடையாதென்று சொல்வேன். இருந்தாலும் இன்று காலை, எனக்கு ஆபத்து வருவதை உஷார் செய்து காப்பாற்றினய். அதற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன். அத்துடன் நீ என்னுடைய உதவியை தற்போது நாடா விட்டால், கட்டாயம் கொலை விஷயத்தில் சம்பந்தப்பட்டு, மாட்டிக் கொண்டு திகைக்கப் போகிறய் என்பதையும் தெரிவிக்கிறேன்" என்றார்.

"அதற்கும் எனக்கும் சம்மந்தமில்லையே. என்னை அந்த கொலையில்........"

"ஏன் அந்த கொலை என்கிறய்? வெஸ்டர்பியின் கொலை என்று சொல்லும். நீ ஸான்ட்பீச் ரோட்டிலுள்ள வீட்டில் யிருந்திருக்கிறய் என்று நினைக்கிறேன், உனது பூட்ஸின் கீழ் றப்பர் அடித்திருக்கிறய். இதைப் போல் பூட்ஸ் லூஸி அணிவதில்லை: நீஞ என்பவள் லூஸி என்னும் பெயரை வைத்துக் கொண்டு, 6 நெ. வீட்டில் வேலை பார்த்து வருவதும் எனக்கு தெரியும். அவள் இதைப் போல் பூட்ஸ் அணிவதைப் பார்த்ததில்லை. ஸான்ட்பீச் ரோட் வீட்டில் டிக்டாபோன் பக்கத்தில் உனது பூட்ஸ் காலடி பார்த்தேன். அதனல் கொலையில் நீயும் சம்மந்தப்பட்டிருக்கிற யென்று உன்னை பிடிக்கவும் கூடும். பிடிக்கவும் போகிறர்கள்" என்று ஷம்ஸ் பயமுறுத்தியவாறு சொன்னர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஸூஸியின் கையிலுள்ள கிளாஸ் டம்ளர் அவளறியாமல் கீழே தவறி நொறுங்கியது. அவளுக்கு பயத்தால் கை கால் நடுங்கியது. அவள் கண் முன் சிறைச்சாலையின் படம் தெரிந்தது. உடனே ஷம்ஸைப் பார்த்து "என்னை என்ன சொல்ல சொல்லுகின்றீர்கள்? என்ன செய்ய சொல்லுகின்றீர்கள்" என்று பதறியவாறு கேட்டாள்.

"நீ காலையில் எனக்கு உதவி செய்ததிலிருந்து, உன்னிடம் நல்ல குணமும் உண்டென்று அறிந்தேன். இக்கூட்டத்தி னின்றும் நீங்கி விடு. நீங்குவதில் கஷ்டம் ஏதும் ஏற்பட்டால் உதவிக்கு நான் தயார். ஒலிவாவை நான் கண்டு பிடிக்கக் கூடிய வழியோ, அல்லது சமாச்சாரங்களோ உனக்கு தெரிந்ததை தெரிவித்து விடு. ஒலிவாவுக்கு என்ன நேர்ந்தது? தற்போது எங்கு வைக்கப்பட்டிருக்கிறள்? ரேனிபர்க்குக்கு என்ன நேர்ந்தது? தற்போது எங்கிருக்கிறன்? ஸான்ட்பீச் ரோட் வீட்டின் கீழ் அறையில் என்ன நடந்தது? அங்கு அநேக நாற்காலிகள் வட்டமாக போடப்பட்டிருந்தன. அங்குள்ள டிக்டபோனை எதை பதிவு செய்ய உபயோகப்படுத்தினர்கள்? ரேனிபர்கை எதற்காக பிடித்திருக்கிறர்கள்? கடைசியாக வெஸ்டர்பியைக் கொன்றது யார்? இவ்வளவுக்கும் பதில் யாதொன்றையும் மறைக்காமல் சொல்லிவிடு" என்று வரிசையாக கேள்விகளைக் கேட்டார். (தொடரும்)

ஐங்காலக் கடமை!

(வேளாங்கண்ணி—கவிஞர், சாந்திதாஸன்)

நானிலமிசையே மானிடர் தம்மை
பேணி ரெட்சிக்கும் பெருமான் ஈந்த
தேனினுமினியத் திருக்கலிமாவை
காணிக்கை யெனவே கவர்ந்துள்ள முஸ்லிம்காள்!

மாணிக்க மணிச்சுடர் மஹமூது நன்நபி
தோணிப்பகர்ந்த தொழுகை எனும் ஐங்கால
இனியக் கடமையினை எடுத்தொழுக ஏன்மறந்தீர்?
புனித இஸ்லாம் புகழும் சோதரரே!

இறைவன் உரைவசனம் சிறிதும் செவியுறாது
மறைமுகமாகவே மதியீன சொற்பொழிவால்
குறைபடலவும் கண்டு கோழையல்ல வென்றிடினும்
திரைமறைவில் தீட்க்ஷையோடு திருவுருவம் காட்டினும்

பறைசாற்றி பார்புகழும் ஆலிமெனப் பகர்ந்திடினும்
மறைபுருக்கானதனில் மங்காது மிளிர்வுறும்
முறைஷராஹான மோட்சத் தொழுகை இன்றேல்
நிறைமன முஸ்லிமென நிரூபிக்கமுடியா சோதரரே!

அரிமாநோக்குடன் ஆய்ந்துணர்வீர் அனவரதம்
துரிதமாய் மாய்மலத் தொல்லை பலதகற்றெரிந்து
சரிசமசாந்திமத சளையாத பற்றுதலுற்று
எரிமலை எஹ்றியர் இடர்ப்பாச வினையறுத்து

தரிப்படும் தாத்தின்பக்கல் தனிமையாய் தான்விரைந்து
உரிமையாய் என்றும் உடலதனில் சார்ந்த
பரிவான பக்திதிகழ் பெறற்கரிய பொற்குவியல்
அரிதாகும் ஐங்காலம் ஆட்கொள்வீர் சோதரரே!

நல்லுபதேசம்.

(அய்யம்பேட்டை S. அப்துர் ரஜாக் ஸாஹிப்)

தம் சந்ததியாரின் அந்தரங்க விரோதிகள் யார்?

நாகரீகம் படைத்த இப்பூமண்டலத்தில் மாத்திர மென்ன, நம் சொந்த நாட்டிலும் சரியே, பலர் தம் சந்ததியாரின் அந்தரங்க விரோதி களுக்கொப்பாக அவர்கள் இரத்தத்தை உறிஞ்சியும், எலும்புகளை மென்றும் தின்னக்கூடிய விதத்தில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களில் பெரும்பாலோர் கல்லாதவர்களுமல்ல. உயர்தரக் கல்விகற்றவர்களே யாவர். அவர்கள் அலக்ஷியமாய் செய்துவரும் பிழை களை யறிந்து கொள்ளக்கூடியவர்களும் அவர்களுக்கு ஒன்றும் செய்வ தற்கில்லை.

இனி அவர்கள் தங்கள் சந்ததியார்களுக்கு செய்துவரும் துரோகம் தான் என்னவென்பதை கவனிப்போம். அவர்கள் சம்பாத்தியம் அளவு கடந்திருக்கிறது. இது சந்தோஷமே—அவர்கள் அதைக்கொண்டு திருப்திகரமான அளவுக்கு உண்ணட்டும் உடுக்கட்டும், அது அவசி யமே. ஆனால் அவர்கள் சொந்த செலவுகள் போக மிச்சப்படும் பணம் அவர்களின் சந்ததியார்களுக்கு எதிர்காலத்தில் பிரயோசனத்தைத்தரக் கூடியதன்றோ? அவர்கள் அதையும் ஒரு மிக்க சேர்த்து சாப்பிட்டு ஏப்பம் விடுவதாயிருந்தால் எதிர்காலத்தில் பெரிதாகி தவிக்கப்போகும் குழந்தைகளின் உரிமைகளை அபகரித்து அவர்களை துரோகம் செய்தது போலல்லவோ ?

ஒரு பெரியார் எழுதுகிறார்:—நான் ஒருவனை கவனித்துள்ளேன். அவன் பெரியதோர் சீமானாக இருந்து வந்தான். வருஷம் 1க்கு பல்லா யிரம் ரூபாய் அவனுடைய வருமானமாக இருந்தது.

அவனுக்கு குழந்தைகளும் அநேக மிருந்தன. ஆனாலோ அவன் தன் வருமான முழுவதையும் தன் சுகானுபவத் துறையில் வாரி இறைத்து விட்டான். குழந்தைகளைப் பற்றி கவலைப்படவே இல்லை. ஆயுள் முடிவுற்றதும் அவன் மறைந்து விட்டான்.

அக்குழந்தைகள், தம் தகப்பனுருக்குப் பின்னர், மிக்க கொடிய தரித்திர தசையில் சிக்குண்டு பிச்சை வாங்கி சாப்பிடும் நிலைமைக்கு எய்தி விட்டார்கள்.

இன்னொரு ஊரில் பெரியதோர் வியாபாரி ஏராளமாய் வியாபாரம் செய்து அளவிறந்த திரவியம் தேடலானான். ஆனால் அவன் தன் எதிர்

கால நிலைமைக்கு கவலைப்படாமலேயே ஆடம்பரச் செலவு செய்ய முயன்றதினால் அதன் மூலம் அவன் தம் சந்ததியார்களின் இரத்தத்தையும் உறிஞ்சு விட்டதற்குச் சமமானான்.

அவன் குழந்தைகள், சிறிது காலத்திற்குள் (அவன் உயிரோடிருக்கையிலேயே) தவிக்க ஆரம்பித்து விட்டனர்.

வியாபாரியின் அசட்டை அவனுக்கு ஓர் படிப்பினையாயிற்று.

மற்றொரு உயர்தர உத்தியோகஸ்தர், பெரும் சம்பளம் பெற்று வந்தவர். ஆனால் அவர் சம்பளமோ மாத முடிவுக்கு முன்னரே செலவாகி விடும். கையில் செப்புச் சல்லியும் தங்காது.

ஏன்? வீண் செலவே முக்கிய காரணம். அவர் பிரதி மாதத்திலும் அதிக தொகையை மிச்சப்படுத்தி தம் சந்ததியாருக்கு ஆதரவு அளிக்க சக்தி வாய்ந்திருந்தாராகிலும் அவர் அப்படிச் செய்யாது அவர்களின் உரிமையை தம் மதுபான விற்பனையாளருக்கு கொடுத்து வந்தார்.

சிறிது காலத்திற்குள் அவர் காலமானதும் அனாதைக் குழந்தைகளுக்கு அனாதை சாலைகளைத் தேடிச் செல்ல நேர்ந்தது. அதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாது போய் விட்டது. இந்நிலைமையில் தந்தையே சந்ததியாரின் சத்துரு அல்லது துரோகி என்று சொல்லப் பொருந்துமன்றோ?

பிரபுக்கள், சீமான்கள், செல்வந்தர்கள் எத்தகைய அந்தஸ்தில் உள்ளவர்களாயினும் சரி, கண் மூடித்தனமாக பணத்தை இறைத்து விட்டு ஓட்டையாண்டிகளாய் விடுகின்றார்கள்.

அவர்கள், தங்கள் சம்பாத்தியத்திற்கு பாத்திரமுள்ளவர்கள் தாங்களே என்று கருதி தங்கள் இஷ்டம் போல் செலவு செய்வார்களாகில் அது அவர்களின் பெரிய தப்பாகும்.

சாதாரணமாக, மனிதன் தன் உடல் சக்தியைக் கொண்டு சம்பாதிக்கிறான். அச்சக்தி அவனது உடலின் மாமிசம், தசை நரம்புகள், இரத்தம் இவைகளைக் கொண்டுள்ளதாகிறது.

சந்ததியும் இந்த இரத்தக் கலப்பைக் கொண்டுள்ளதாகிற தென்றால், முதல் இரத்தத்திய சம்பாதனைக்கு இரண்டாவது இரத்தமே உரிமை வாய்ந்ததாகும். எனவே அதற்கு துரோகம் செய்யும் தந்தைகள், சந்ததிகளின் இரத்தத்தை உருஞ்சுகிறவர்களேயாவர். கொள்ளைக்காரர்கள் கொள்ளை யடித்தபோதிலும் தங்கள் வீட்டினுள் கொள்ளை அடிக்கிறார்களில்லை. ஆனால் மேற்கூறிய தந்தையார்கள் தம் வீட்டுக்குள்ளாகவே கொள்ளையடித்து சந்ததியார்களின் இரத்தத்தை உறிஞ்சிக்

கொள்ளுகிறார்களாகில் இவர்கள் அக்கொடியவர்களைக் காட்டிலும் கொடியவர்களேயாவர், என ஏன்சொல்லலாகாது.

நான் மேற் சொல்லப்பட்டவர்களை பார்க்கிறேனாகில் என்மனம் நடுக்க முறுகிறது. எனவே, நான் என் சகோதரர்களுக்கிடை சந்ததியார்களைக் கொண்ட ஒவ்வொருவரையும் இவ்விஷயத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்து ஒழுகும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

இல்லையேல், செல்வம்படைத்த தந்தைகள் அக்குறைகளுக்கு இடம்வைத்து இறந்து போவார்களாகில், தரித்திர தசைக்காளான சந்ததியார்களே தங்கள் தந்தையார்களின் வாழ்க்கையிலுள்ள குறைகளை உலகத்தவர்களுக்கு எடுத்துக்கூறி, தங்கள் சகிக்கொணாத கஷ்ட நிஷ்டூரங்களின் நிமித்தம் அவர்களை கேவலமாய் பேசி, சில சமயங்களில் திட்டவும் ஆரம்பிப்பார்கள். (பஹமி)

உன் சௌந்தரியம் நிலையற்றது.

சௌந்தரியம் படைத்த கன்னிகைக் குமரியே! செருக்கடையாதே. உன் சௌந்தரியம் நிலையற்றது. இந்த அழகும் மேனியும் உன்னில் நிலையாக விருக்கப் போவதில்லை. எதிர் காலத்தில் நீ அடையப்போகும் தோற்றத்தை நினைத்துப் பார்ப்போமானால் அது எனக்கும் உனக்கும் ஓர் அரிய படிப்பினையாகிறது. இப்போதைய உன்அழகையும் எதிர்கால மாறுதலையும் சற்றுநேரம் சிந்தித்துப் பார்க்கிறேனாகில் என்மனம் நடுங்கிவிடுகிறது.

உன்னுடைய இந்த தழுக்கும் மேனியும், குலுக்கும் நடையும் என்றும் நிலைத்திருக்குமென நீ கர்வங் கொள்ளவேண்டாம்.

வசந்த காலத்திற்குப்பின் இலையுதிர்காலமும் வந்தே தீரும். நீ அற்ப சொற்ப அறிவை படைத்திருந்த போதிலுங்கூட இப்போதைய உன் உற்சாககாலம் முடிவடையப் போவதை ஞாபகத்தில் கொண்டுவா.

இன்று உன்னிடம் பற்று வைத்திருப்போர், நாளை உன் விசுவாசத்தை முற்றிலும் கைவிடப் போகிறார்கள். அப்போது நீ வருந்துவாய், கண்ணீர் விடுவாய். உன்னைக்கண்டு இரக்கப்படுவோர் இருக்கப் போவதில்லை.

உலக மாறுதல்களைக் கண்டு நீ படிப்பினைப் பெறவில்லையா? மானிட வாழ்க்கை நிலையற்றிருப்பது. சகல ஜீவ ஜந்துக்களுக்கு ஒருநாள் மரணம் வந்தே தீரும். ஆகையால் மறுமைக்குரிய பிரயாணத்திற்கு அவசியமான நன்மைகளைத் தேடவேண்டும் என்ற எண்ணம் உனக்கு சிறிதும் வரவில்லையா?

நான் உன் சென்ற காலத்தைக் குறித்து சற்று ஞாபகமூட்டுகிறேன். நீ ஓர் இளம் பெண்ணாக இருந்தாய், உன்காலம் சிறிதும்

கவலையற்று கழிந்தது. யௌவனப் பருவம் வந்ததேயாகில் அதை முற்றிலும் அசட்டையில் கழித்துவிட்டாய். இனி ஏற்றத்திலிருந்து இறக்கம் ஏற்பட்டுவிட்டது. உன் பிரயாணநேரம் சமீபித்து விட்டதென மறுமை ஆபீஸ் டெலிபோனை நீ அடைந்து விட்டாய். அடுத்தபடியாக, நீ, செய்ய வேண்டிய தென்ன? என்பது பற்றி யோசித் தறிந்து கொள்வாய். அழைப்பு நேரம் வந்துவிட்டதும் உனக்கு நிமிஷ நேரத்திற்கும் அவகாசம் கிடைக்கப் போவதில்லை.

ரூபவதியே! மனிதன் வியாதியஸ்தனுய் விடுகிறுன், அது சமயம் அவனுக்கு எம்மட்டில் ஆறுதலின்மை ஏற்பட்டுவிடுகிறது. சீக்கிரம் சொஸ்தமாய் விடவேண்டு மென முயற்சிக்கிறுன். பந்து மித்திரர்களும் அதையே விரும்புகிறுர்கள்.

ஏனெனில், நோயாளி தம்மை விட்டும் பிரிந்து போகலாகா தென்பதே அவர்கள் நோக்கம். அதற்காக வேண்டி அவர்கள் பணங் காசை பொருட்படுத்தாமல் அவன் சிகிச்சை விஷயத்தில் தாராளமாய் செலவு செய்கிறுர்கள்.

ஆயினும் மலக்கல் மவுத் என்னும் மரணவானவர் (யமன்) வந்து விடுகிறுராகில், அவர் நோயாளியின் ஆத்மாவை தம்மோடு கொண்டே போய் விடுகிறுர்.

உன் அழகைக் கண்டு மதிமயங்கி உன்னை இச்சித்தோரும் நீ சற்று நேரத்திற்கும் தம்மை விட்டுப் பிரியலாகாதென உன்னை பாதுகாத்து வந்தவர்களும் இனி உன்னை என்ன செய்வதில் மும்முரமாக இருக்கிறுர்கள் என்பதை சிந்தித்தாயா ?

எவ்வளவு சீக்கிரம் சாத்தியப்படுமோ அவ்வளவு சீக்கிரம் பூமிக்குள் புதைத்துவிட வேண்டும் என்ற அலுவல்களிலேயே அவர்கள் ஈடுபட்டு விடுகிறுர்கள்.

மனக்கவர்ச்சியுள்ள ரூபவதியே ! பார். உன்னை சிரமேற் கொண்டு பாதுகாத்து வந்தோர் எவ்வளவு குரூபிகளாக இருந்திருக்கிறுர்கள். உன்னை கவனிக்கையில் எனக்கு அலட்டி உண்டாகிறது. உன் பரிதாப நிலைமை என்னுல் பார்க்கு முடியவில்லை. உன் மனம் பலஹீன மடைந்திருப்பது போலவே உன் தைரியமும் குன்றிப் போய் விட்டது.

நீ, உன் ஈமானுடைய சக்தியை பலப்படுத்துவாய். மறுமைக்குரிய சுகானுபவங்களை இம்மைக்குரிய சுகானுபவங்களுக் கெதிரில் சிறப்பாக்கி வைப்பாய். அதுவே உன்னை நிலைப்படுத்தி வைக்கும். எல்லாம் வல்ல இறைவனுடைய பேரின்பத்தை மனதிற் கொண்டு நடப்பாய். அதுவே உனக்கு ரக்ஷகனுகி விடும்.

இன்றே செயலில் வேண்டும்!

(வேளாங்கண்ணி—கவிஞர், சாந்திதாஸன்)

வாய்மை, தூய்மையோடு—உயர்
ஆயமறை சார்ந்தொழுகி—மிக
நேயமுறும் இஸ்லாத்தின்—நன்
தோய்பாந்தத் தொடர் வேண்டும்!

தாத்மீகம் சால்மதி பொன்றி—பெரும்
காத்திகப் பணியினிற் ஒன்றி—அரும்
கோத்திர அறநெறிகுன்றி—நிற்போர்
நேத்திரம் தெளிவுறல் வேண்டும்!

பஞ்சையர் வெஞ்சினமீறி—நம்மை
அஞ்சிட நிர்ப்பந்தம் கோரி—ஒரு
கிஞ்சிற்றும் குறுமதி திருந்தா—வில்லும்
வஞ்சகம் வீழ்த்திட வேண்டும்!

ஒன்றே குலமென அன்றே—வீர
கன்டணம் விடுத்துள்ள சாந்தி—தனை
அண்டியே அனைவரும் வாழ—நாமும்
இன்றே செயலில் அழைத்தல் வேண்டும்!

விளம்பர விளக்கம்.

அறிவுலகிற்கோர் அரிய சந்தர்ப்பம்! மதப்பிரச்சார மாநாட்டு மன்றங்களுக்கும், மற்றும் அரசியல் பொதுமேடை ஆக்க அலுவல்களுக்கும், எழுதுகோல் ஏந்துகின்றோர் இன்பலட்சியத்திற்கும், இஸ்லாமிய அண்டு தமிழக பத்திரிகை பணியின் உதவி ஆசிரியர் தேவைக்கும் கீழ்காணும் முகவரியை உடன் பயன் படுத்திக்கொள்க.

முகவரி :—
கவிஞர், சாந்திதாஸன்
“ கலா நிலையம் ”
வேளாங்கண்ணி P. O.
நாகை வழி

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்.

ஒவ்வொரு வருஷமும் இக்காலண்டர் எங்களால் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதில் இங்கிலீஷ், தமிழ், அரபி ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக. 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. அத்துடன் தொழுகைளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும், வருடம் பிறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே (டிசம்பர் மாதத்திலேயே) தயாராகி விடும்: இவை சொற்ப காலண்டர்களே அச்சிடுவதால் ஜனவரி–மீ வருவதற்குள் செலவாகி விடுவதும் வழமை. ஆதலால் தங்களுக்கு தேவையுள்ள காலண்டர்களுக்கு டிசம்பர் மாதத்திலேயே ஆடர் செய்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இதன் விலை 1–க்கு அணா. 10

100–க்கு ரூ. 50

புதிய இரண்டாம் பதிப்பு

நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரம்

(சீறுவசனம்.)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 8

அறபுத் தமிழ் அஷ்ஷஜாதுல் முஹம்மதியா (றஸூலுல்லாவின் சரிதை) விலை ரூ. 8

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

220733

மரண அவஸ்தை.

தி-லி. பேட்டை, R. J. A. காலேஜ், M. S. காஜா முஈனுத்தீன்

மனிதன் விடும் ஒவ்வொரு மூச்சும் மரணத்தை நோக்கி எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடியாகும் !!

உலகத்தில் மனிதர்களுக் கிடையில் சாதாரணமாக யாரும் மரணத்தைப் பற்றிச் சிந்தனை கொள்வதில்லை. எந்தச் சமயத்திலும் மரணம் உண்டு என்ற ஞாபகமே இருப்பதில்லை. மரண அவஸ்தைப் படுகின்ற பல பந்துக்கள், பெற்றோர்கள், நண்பர்கள், மனைவி, மக்கள் ஆகியவர்களைக் கண்ணால் கண்டுங் கூட உணர்ச்சி பெறுவதில்லை. ஆனால் மையத்து (உயிற் நீங்கிய உடற்)க்கு இந்தச் சந்தேகம் கிடையாது. மரணத்தை அனுபவித்த உடன் அதன் சந்தேக மெல்லாம் நிவர்த்தி யாகி விடுகின்றன. தூங்கையிலே வாங்குகின்ற மூச்சு—அது சுழி மாறிப் போனாலும் போச்சு !! பாங்கான திருநாளும் ஆச்சு—அங்கு பல பேர்கள் கூடி கதை பேசலாச்சு !! தூங்கையிலே என்ற பாட்டில் கண்ட படி நேற்றுவரை பல இன்ப சுகங்களை அனுபவித்துக் கொண்டும், பல வித உலக காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டும் இருந்தவன் இரவில் எவ்வித முன்னறிவிப்பும் மரணத்தின் குறியும் இல்லாமலே உயிர் நீங்கி விட்டான். துக்கம் விசாரிக்கச் செல்லும் மனிதர்கள் அங்கு கும்பலாய் கூடி யிருந்து உலக வம்புகளை அளக்கின்றார்களே யொழிய மரணத்தின் இயல்புகளைப் பற்றி ஒரு வார்த்தைக் கூட பேசுகிறார்களில்லர். இதி லிருந்து மனிதர்கள் பொதுவாக மரணத்தைப் பற்றிய ஞாபகமே இல்லா திருக்கின்றனர், என்று அறிந்து கொள்கிறோம்.

மரணமானவனுக்கு நேர்ந்த கதி தனக்கும் எந்த நேரத்தில் சம்பவிக்குமெனப் பயந்து தன்னை எந்தச் சமயத்திலும் அதற்காக வேண்டி தயார் செய்து கொண்டிருப்பவனே ஜெயம் பெற்ற உண்மை விசுவாசியாவான்.

“மரணத்தின் அவஸ்தை மனிதர்களுக்கு தெரிந்து இருப்பது போன்று விலங்கினங்களுக்குத் தெரிந்து இருக்குமாயின் அவைகள் மரணத்தை நினைந்து மெலிந்து, தசையும் கொழுப்பும் கரைந்து உருகி, வெறும் தோலும் எலும்புமாக காட்க்ஷி அளிக்கும்”. இன்னும் “மரண

தருவாயில் உண்டாகும் அவஸ்தையானது உயிரோடிருக்கும் மனிதனை கூரிய வாளால் எழுபது தடவை வெட்டுவதைக் காண கடினமாக இருக்கும்" (நாயக வாக்கியம்)

அம்றினுப்ஆஸ் (ரலி) அவர்களின் புதல்வர் கூறி யிருப்பதாவது :—

மனிதனுக்கு பேச நாவும், யோசிக்க புத்தியும் உண்டா யிருக்க, மரணம் வருங்கால் அதன் அவஸ்தை இன்னவிதம் என்று ஒரு சிறிதள வேனும் எடுத்துச் சொல்ல அவனால் முடிவதில்லை. எனது தந்தையார் மரணத் தருவாயில் உஷாராய் இருந்ததைக் கண்ட நான், "தந்தையே! உங்களுடைய அவஸ்தையைச் சிறிது எடுத்துக் கூறுங்கள்." என்று வேண்டி நின்ற போது அவர்கள்,

"மகனே வார்த்தைகளால் விளக்கிக் காட்டத்தகாத அவஸ்தை எனினும் சிறிது சொல்கின்றேன் கேள். ஆண்டவன் பேரில் ஆணையாகச் சொல்கின்றேன், என் புஜங்களில் 'ரள்வா' என்ற பிரமாண்டமான மலை சுமத்தப்பட்டிருப்பது போலும் எனது ஜீவன் ஊசித்துவாரத்திற்குள் நுழைத்து இழுக்கப்படுவது போலும், பூமியும் வானமும் ஒன்றோ டொன்று உராவ, அவற்றிற் கிடையில் அகப்பட்டு நெறுக்கப்படுவது போலும் நான் இப்போது அவஸ்தைப்படுகிறேன்" என்றுரைத்தார்கள்.

மரணம் அணுகும் போது உலக சுகங்கள் யாவற்றையும் விட்டுப் பிரியப்போகும் கவலை ஒரு பக்கம் : மனிதர்களுக் கிழைத்த அக்கிரமங் களும், அநீதங்களும் அடாச் செயல்களும், முறைகேடுகளும் ஒன்றாய் திரண்டு அப்போது மனதை நோவிக்கும் நோவினை ஒரு பக்கம், எம தூதர் சமீபித்துக் கொண்டிருக்கும் விரைவின் வேகத்தால் கலங்கும் இருதயத்தின் கலக்கம் ஒரு பக்கம், ஷைத்தானாகிய இபுலீஸ் லஃனதுல் லா(ஹ்)வால் ஏற்படும் சூழ்ச்சியின் ஏமாற்றம் மற்றொரு பக்கம். இவ்வாறு துன்பங்களால் ஏக்கமுற்று தடுமாறி சமாளிக்க முடியாத நிலைமையில் தத்தளிக்கும் போது தாகம் மற்றொரு பக்கம், அவன் நாக்கை இழுத்து சுருட்டி விடுகிறது. அப்போது ஏழு கடல் நீரையும் அமுதமாக்கி அவனுக்கு ஊட்டப்படினும் அவனது மரணத்தின் கசப்பு சிறுதள வேனும் குறையாது. அவன் தனது ஆசாபாசங்கள் யாவும் ஈடேற முடியாமல் அப்போது நிர்கதியாகி விடுவான். அவனது பரிதவிப்பு, கூப்பாடு யாவும் பயனற்று முடிவில் மரண வாளுக்கு இறையாகி விடுகிறான்.

இவ்வாறு இமாம் யாபீயீ (ரஹ்) தங்கள் 'இற்ஷாத்' எனும் நூலில் விவரித்துள்ளார்கள்.

ஸிராஜுஸ் ஸாலிகீன்.

[கஸ்ஸாலி இமாம் (றஹ்) அவர்களுடையது]
தமிழ் மொழி பெயர்ப்பு.

வினு :—ஒவ்வொரு அமுலுக்காகவும் தனித்தனியான இக்லாஸ் அவசியமா? இல்லையா?

விடை :—இந்த மஸ்அலா (பிரச்னே) வில் அபிப்பிராய பேதம் உண்டு. ஆயினும் சகலவித வணக்கங்களுக்காகவும் ஒரே இக்லாஸ் போதுமாகும். அதுவானது உலூ, தொழுகை இவ்விரண்டும் ஒன்றுக்குப் பின் ஒன்ருக இரே இக்லாஸினுல் இணக்கப்பட்டிருப்பதைப் போலவே யாகும். எனவே ஒன்றுக்கு மேற்பட்ட இக்லாஸ் வேண்டியதில்லை.

வினு :—ஒருவன் நல்ல அமுலுகளைச் செய்கிறுன் அவன் நோக்கம் அவைகளின் மூலம் மக்களுக்கிடை யாதொரு பலனடைய வேண்டும் அல்லது கீர்த்தி பெற வேண்டும் என்பதல்ல. நேரடியாக அல்லா விடத்திலேயே அவன் உலக பலாபலன்களைத் தனக்கு தந்தருளுமாறு கோருகிறுன். இதுவே அவன் எண்ணம். அவனது இந்த அமுலு ரியாகாரி (மக்களுக்கு காட்டுதல்)யைச் சேர்ந்ததா? இல்லையா?

விடை :—அவன் அமுலும் ரியாகாரியைச் சாரும். அறிவாள் கூறுகிறுர்கள் :—

ரியாகாரி ஒருவன் சுயநலத்தைச் சார்ந்தது. சுயநலம் யார் மூலம் பெறுவது என்பது கிடையாது. நற்கருமங்களினுல் உலக நன்மைகளை அடைவதற்காக அவன் மக்களை வேண்டிக் கொண்ட போதிலும் சரி அல்லது அல்லாவை இறைஞ்சிக் கேட்ட போதிலும் சரியே.

அல்லா தன் திருவேதத்தில் கூறுகிறுன் :—“எவனெருவன் எம்மிடத்தில் நிலபலன்களை தனக்கு தருமாறு வேண்டிக் கொள்ளுகிறுனே அதே யளவில் யாம் அவனுக்குத் தருவோம் (ஆனுல்) இப்பேர்ப்பட்டவனுக்கு மறுமையில் யாதொரு வீதமும் கிடையாது”

வினு :—ஒருவன் தன் நல்ல அமுலுகளின் மூலம் தொழுகை வணக்கத்திற்காக (துன்யாவை) உலக வாழ்க்கையை இறைவனிடம் கேட்கிறுன். அதன் ஆதரவில் வணக்கத்தில் வலிமை யடைய வேண்டும் அத்துடனேயே உலக வாசிகளின் தேவை யற்றிருக்க வேண்டும் என்பது அவன் நோக்கம். இது, ரியாகாரியா அல்லவா?

விடை :—அவன் நோக்கம் அல்லா உடைய வணக்கத்தில் மாத்திரம் வலிமை யடைய வேண்டும் என்று ஏற்படுங்கால் அது ரியாகாரி ஆகாது. மறுமைக்கான அலுவல்களில் எந்த விஷயம் சம்பந்தப்பட்டிருந்த போதிலும் அதை நல்ல அமுலுகளைக் கொண்டு வேண்டுவது ரியாகாரி ஆகமாட்டாது.

ஒருவன் அல்லா உடைய நேர்மையான மார்க்கத்திற்கு ஆதரவு ஏற்பட வேண்டும், மக்களுக்கிடை மார்க்கக் கல்வி பரவவேண்டும் என்பதற்கு அனுகூலமாக செல்வ அந்தஸ்து வாய்ந்திருந்தால் மக்கள் தன்னை வரவேற்பர் என்று எண்ணினுல் அவனுடைய அமுலும் ரியாகாரியை கொண்டதாகாது.

தன் சுயகண்ணியத்தை முன்னிட்டும், தனியே உலகசம்பந்தமான விஷயங்களைக் குறித்தும் கடைபிடிக்கும் அமுல் 'ரியா'வைக்கொண்டது.

வினு :—சில ஔலியாக்கள் தமக்கு செலவு கஷ்டம் ஏற்பட்ட சமயத்தில் "வாகியா" சூராவை ஓதுகிருர்கள், அவர்களின் பொருள் கஷ்டத்தை அல்லா நிவர்த்திக்க வேண்டும். உலக வஸ்துக்களில் அவசியமானவை தாராளமாய் அடையப்பெற வேண்டும் என்பதன்றே அவர்களின் நோக்கம்? நல்ல அமுலுகளின் மூலம் உலகப் பொருள்களை விரும்புவது தகுதியா ?

விடை :—தகுதியாகும் ஏன் ? மஹான்கள் தங்களுக்கு கிடைக்கும் படியான புசிகாணத்தைக் கொண்டு திருப்தி யடைந்து அல்லா உடைய தொழுகை வணக்கத்தில் ஈடுபட்டுப் போகக் கூடியவர்கள் ஜீவித்திருக்கும் காலத்தை அவர்கள் ஏகத்துவம் நிறைந்த ரகசியக் கல்வியைக் கற்பதில் அர்ப்பணஞ் செய்து விடுவர். அவர்கள் எண்ணம் முழுவதும் மறுமையின் நலனைக் கொண்டதாகுமே யொழிய உலகாசையைக் கொண்டதல்ல.

வினு:— மெஞ்ஞானி ஒருவனுக்கு மனதில் உதிக்கும்படியான எண்ணம் அல்லாவின் சார்பாக உதிப்பதில்லை என்பதன் ரகசியம் யாது?

விடை:— தற்புகழ்ச்சியே இதன் ரகசியம். தற்புகழ்ச்சி படைத்தோர் 3 வகைப் படுவர் :—

(1) எப்பொழுதுமே தற்புகழ்ச்சியைக் கொண்டவர்கள். இவர்கள் தங்களுக்கு நலமான செயல்களின் துறையில் அல்லாவுடைய நன்றிகளை அங்கிகரிப்பதில்லை. அவனுடைய அருள், எண்ணம், கிருபை ஆகியவற்றை நிராகரிக்கின்றனர். அத்தோகையோரில் ஏற்படும் ஒருவித சந்தேகமே இதற்குக் காரணம்.

(2) ஒவ்வொரு நிலையிலும் அல்லாவுடைய நன்றிகளை ஒப்புக் கொள்ளுகிருர்கள், இவர்கள் திறம் படைத்தவர்கள், இவர்களின் எச் செயலிலும் தற் புகழ்ச்சியின் நாமதேயமே கிடையாது. அதன் பொருட்டு அல்லா அவர்களுக்கு பிரத்யேகமான பார்வை ஒளியொன்றை தந்தருளியுள்ளான்.

(3) இவர்கள் மேற்கூறியுள்ள இரண்டு அம்சங்களையும் மேற்கொண்டவர்கள், அதாவது இவர்கள் விழிப்படைகிருர் களாகில் அல்லா

வுடைய நன்றிகளை யொப்புக் கொள்கிறார்கள். அசட்டை செய்கிறார்களாகில் தற்புகழ்ச்சி நிலையில் சிக்குண்டு போகின்றனர். அவர்களின் தற்காலிக அசட்டை சிரத்தையின்மை, சோம்பல் ஆராய்ச்சிக்கெடுதி இவைகளே அதற்குக் காரணம். இவர்கள் சுன்னத் ஜமாஅத் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

வினா:— ரியா, (அமலை வெளிக்காட்டுதல்) தற்புகழ்ச்சி, இவ்விரண்டையும் தவிர அமலில் சீர்க்கேட்டை யுண்டாக்கக் கூடிய விஷயம் ஏதேனும் உண்டா? இல்லையா?

விடை:— உண்டு, "ரியாவும்" "புகழ்ச்சியும்" பிரதான அம்சங்கள் என்பதற்காக அவைகளைப் பற்றிய சங்கதி தனியே எடுத்துச் சொல்லப்பட்டது. சில மஷாயகீன் (றஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:—

அடியான் தன் அமலினிடையே பத்து விதமான அம்சங்களினின்றும் ஒதுங்கியிருத்தல் வேண்டும். (1) ஒற்றுமை (2) சியாகாரி (3) சேர்க்கைப் பிரிவு (4) நன்றியை எடுத்துரைத்தல் (5) இம்சித்தல் (6) வெட்கமடைதல் (7) கர்வங் கொள்ளல் (8) வருந்தல் (9) சோம்பல் (10)மக்களின் கண்டனத்திற்கு பயப்படுதல், இவை சீர்க்கேட்டை விளைவிக்கக் கூடியவை.

வினா:— ஷுக்ரு (நன்றி) பாராட்டவேண்டிய சந்தர்ப்பம் யாது?

விடை:— லௌகீக வைதீக சம்பந்தமான பாக்கியங்களைக் குறித்தே நன்றி பாராட்ட வேண்டும். இதுவே அதற்குரிய சந்தர்ப்பம்.

வினா:— உலகில் ஒருவன் தன் பிள்ளைகுட்டிகளின் பரிபாலன விஷயத்திலும், நப்ஸின் அவசியத்திற்காகவும் கொடிய துன்ப சங்கடங்களை அடைகிறான். இச்சந்தர்ப்பத்தில் ஷுக்ரு (நன்றி) செய்வது வாஜிபா இல்லையா?

விடை:— துன்பத்திலும், கஷ்டத்திலும் ஷுக்ரு வாஜிப் இல்லை. ஸப்ரு (பொறுமை) வாஜிப் ஆகும். யாதொரு இகபர பாக்கியத்திற்காகவே ஷுக்ரு உரித்தானது என்று சில அறிவாளர் கூறியுள்ளார்கள்.

வினா:— "ஷுக்ரு" (நன்றி பாராட்டுதல்) "ஸப்ரு" (பொறுமைக் கொள்ளல்) இந்த இரண்டில் எது மேலானது?

விடை:— அறிவாளர்களுக்கிடை சிலர் 'ஷுக்ரு' மேலானது என்கிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்:– "என் அடியார்களுக்கிடை ஷுக்ரு செய்பவர்கள் சிலரேயாவர்"

ஷுக்ரு செய்பவர்கள் அல்லாவின் சொந்த அடியார்களினின்றும் ஆவர் என்ற விஷயம் இதிலிருந்து வெளியாகிறது.

வல்ல இறைவன் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களை புகழ்ந்து சொல்லுகிறான் "அவர் நன்றி பாராட்டும் அடியாராக இருந்தார்."

மேலும் ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்களைக் குறித்து "அவர் அல்லாவுடைய நியாமத் (பாக்கியம்) திற்காக நன்றி செலுத்திவந்தார். (ஆதலின்) அவர் ஒப்புக் கொள்ளப் பட்டார்"

நாதா ஒருவர் பின்வருமாறு மொழிந்துள்ளார் "நான் துன்பத்தில் சிக்குண்டுபோய் அதற்காக (ஸப்ரு) பொறுமை அடைவதைக் காட்டிலும், அல்லாவுடைய நியாமத் கிடைத்தால் அதைப் பெற்று மேற் கொண்டும் 'ஷுக்ரு' செய்வேன்." இதிலிருந்து 'ஷுக்ரு' என்பது இனுமுக்கு பிரதியாக அமைந்திருப்பதற்கு இது இரண்டாவது அத்தாட்சி.

வினு:—ஸப்ரு என்பது ஷுக்ரைவிட மேலானது-ஏன்?

விடை:—"ஸப்ரை அதிக பிரயாசையுடன் மேற் கொள்ளவேண்டியிருப்பதால் அதில் அதிக நன்மை உண்டு, அதன் பதவியும் உன்னதமானது" இவ்வாறு அறிவாளர்களுள் சிலர் அறிவிக்கிறார்கள்.

ஹஸ்ரத் அய்யூப் அலி நபிய்யனு (அலை) அவர்களை சிலாகித்து அல்லாஹ் "யாம் அவரை பொறுமையாளர் எனக்கண்டோம், அவர் நல்ல அடியார்-ஏனெனில் அவர் (நம்மை) நோக்கக் கூடியவர்" என்று திருவுளம் பற்றுகிறான்.

(1) "பொறுமை வாய்ந்தவர்கள் தங்கள் கூலியை கணக்கி லடங்காத விதத்தில் தாராளமாகவே அருள்புரியப்படுவர்"

(2) "அல்லா பொறுமை வாய்ந்தவர்களை நேசிக்கிறான்" (திருகுர்ஆன்) ஷுக்ரு செய்பவன் உண்மையில் பொறுமை வாய்ந்தவன். என்பதற்கேற்ப பொறுமை வாய்ந்தவனும் உண்மையில் ஷுக்ரு செய்பவன் என்றே நான் (ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி றஹ்.) சொல்லுகிறேன் எப்படியெனில், ஷாக்கிர் (ஷுக்ரு செய்பவன்) தன்நப்ஸை (இச்சையை) குப்ரு சம்பந்தப்பட்ட நியாமத்களினின்றும் தடுத்துக் கொள்வான், இல்லையேல் அவன் ஆண்டவன் கட்டளைக்கு மீறியவனுயிருக்கிறான். அவன் அவ்வாறு தடுத்துக் கொள்ளும் செயலே "ஸபர்"

ஸாபிர், தன் நப்ஸின் துடிப்பு ஆறுதலின்மை இவைகளை அடக்கிக்கொள்ளும் சக்தி வாய்ந்தவன், இச்சக்தி அல்லாவின் அருளால் அவனுக்கு அடையப்பெற்றது. அந்த அருள் ஸாபிரிடம் ஷுக்ருஎனப்படும்.

வினு:—ஒரு அடியான் அல்லாவுடைய பிரத்தியேகமான 'தவ்பிக், கொண்டு அவன் சொந்த அடியார்களுக்கிடை மதிக்கப்பட்டு வருகிறான். மற்றொரு அடியானுக்கு அத்தகைய தவ்பீக் புசிப்பாகவில்லை. அவன் க்ஷீண தசையிலிருக்கின் இபாதத் என்னும் வணக்கத் துறையிலோ

220733

இருவர்களுடைய போக்குமொரே மாதிரியாகத்தான் இருக்கிறது, அதன் காரணம் என்ன?

விடை:—இத்தகைய கேள்வி கேட்கப்பட்டால் வல்ல நாயனு டைய மகிமையும் மாட்சிமையும் பொருந்திய ஆசன பீடங்களிலிருந்து "ஜாக்கிரதை! மரியாதையை தவற விடாதே. நீயோ அடியான் அடி மைத்தனத்தின் இரகசியங்கள் இன்னவை என்பதை நீ அறிந்து கொள்ள முடியாது. அல்லாவுடைய செயல்கள் யாவும் தந்திரம் படைத்த அஸ்திவாரத்தின்மேல் நிறுவப்பட்டிருக்கின்றன" என்ற மொழிகளின் சப்தம் செவியுறப்படும். ஆனதுபற்றி, அல்லாவுடைய செயல்களைக்குறித்து பழுது சொல்ல அடியானுக்கு தத்துவம் கிடை யாது.

"அல்லாவுடைய காரியங்களில் அடியானுக்கு ஆக்ஷேபம் கிடை யாது. மனிதர்களுடைய செயல்களைக் குறித்து கேள்வி கேட்கப்படும்" (திருக்குர்ஆன்.)

என் அபிப்பிராயம் (ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி ரஹ் அவர்கள்) யாதெனில்:—இப்பிரச்னை புல்சிராத் என்னும் பாலத்தின் நிலைமைக் கொப்பானது அதாவது கியாமத் நாளில் ஒருவன் அப்பாலத்தை மின்னலின் வேகத்தில் கடந்து செல்வான். ஒருவன் பறக்கும் பறவை யின் வேகத்திலும், ஒருவன் வேகமுள்ள குதிரை ஓட்டத்திலும், ஒரு வன் சாதாரண நடையின் போக்கிலும், நடந்து முறையே அப்பாலத்தை கடப்பார்கள்.

நரகத்தின் சத்தத்தைகேட்டதும் அதில் தடுமாறி விழுந்துபோகிற வனும், நரகத்தில் உள்ள நாய்களினால் கௌவப்பட்டு சாய்ந்துபோகக் கூடியவனும் உண்டு. என்பதைப் போலவே உலகப்போக்கு வழியும் அப்பாலத்தின் வழியை ஒத்திருக்கிறது. இதற்கு இம்மைப்பாலம் என்றும் அதற்கு மறுமைப்பாலம் என்றும் சொல்லலாம். இன்னமும் கேளுங்கள் அடியான் உள்ளமும் இம்மைப்பாலம் இதில் எண்ணிறந்த வியாகூல எண்ணங்கள் உதித்தல் சகஜம்.

அடுத்தாற்போல் அடியான் நப்ஸ் (துர்இச்சை) இது மறுமைப் பாலம். அதிலும் கணக்கிலடங்காத பல்வேறு உணர்ச்சிகள் குழப்ப மடைந்து கொண்டிருக்கும். இவை யாவையும் இரகசிய ஒளிபடைத்த கண்கள் பார்க்கின்றன.

ஸாலிக்கீன்கள் (உலக வாழ்க்கையுடன் ஒழுகிவந்தவர்கள்) மறு மையில் மாறுபாடுபட்டிருப்பர். இது அவரவர்களின் உலகபோக்கிற் குத்தக்கவாறு ஏற்படும். இதையெல்லாம் ஊன்றிப்பாருங்கள். அல்லாவே எல்லோருக்கும் தவ்பீக் என்னும் நல்லெண்ணத்தை அருள்புரிவானாக.

சிறு கதை.

பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயர் வழக்கம்போல அந்த வகுப்பிலுள்ள எல்லா பிள்ளைகளுக்கும் தக்க வயதுதானா என்று அறிய ஒன்றாவது வகுப்பு உபாத்தியாயரிடம் பிறந்த தேதி சர்டிபிகேட் வாங்கி வைக்கும்படி கூறினார். ஒன்றாவது வகுப்பு உபாத்தியாயர் எல்லா பிள்ளைகளிடமிருந்தும் அவர்களின் பெற்றோர்களிடமிருந்து வந்த பிறந்த தேதி சர்டிபிகேட்களைப் பெற்றுக் கொண்டார். ஆனால் ஒரு பையனிடமிருந்து மாத்திரம் அந்த சர்டிபிகேட் வரவில்லை. அப்போது உபாத்தியாயர் அந்த பையனின் பெற்றோர்களுக்கு பிறந்த தேதி சர்டிபிகேட் கொண்டு வந்து கொடுக்கா விட்டால் உடனே பையனை வகுப்பிலிருந்து அகட்டி விடுவதாக ஒரு கடிதம் எழுதினார். அந்த பையனின் தாயார் உபாத்தியாயருக்கு கீழ்கண்ட கடிதம் எழுதினாள்.

கனம் உபாத்தியாயர் அவர்களுக்கு எழுதுவதாவது எனது பையனுக்கு பிறந்த தேசி சர்டிபிகேட் கிடையாது. என்றாலும் நான் நிச்சயமாக அவனுக்கு வயது ஆறு இருக்கும் என்று சொல்வேன். எனக்கு அவனைவிட சிறிய குழந்தைகள் ஆறு இருக்கின்றன.

இப்படிக்கு,

....

லைலா மஜ்னூன்.

அரபு தேச சர்தாருடைய அருமைக் குமாரனாகிய மஜ்னூனென்னும் வாலிபன், அழகில் சிறந்த லைலா என்னும் ஒரு பெண்ணரசி பேரில் காதல் கொண்டு, ஒருவரையொருவர் நேசித்து பல துன்பங்களுக்கு இலக்காகி, இறுதியில் சந்திக்கும்வரை நடந்துள்ள சரிதை இது. உர்தூ பாஷையில் லைலீ மஜ்னூனென்னும் பெயர் பெற்ற காவியமாகி விளங்கி வந்ததை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அருமையான நாவலைப் போல் வசன ரூபமாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1—4—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

வெளிவந்து விட்டது!

பத்ஹுர் ரஹ்ம...
பில்பிக்ஹின் னுஃமா...

(ஹனபி மதுஹபுக் குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜனமில்லாத கல்வி... இரண்டு வகையுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்... சொல்லுவது பிரயோஜனமில்லாத கல்வி, நம்மனமும் ஒழுக்க... மும் சிர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்கமுறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையுங் கற்ற றிந்து அமல் செய்யவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடைய வும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இருலோகத் தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதா ரணமாக: ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக் கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அமைக்கப்பட்டுள் ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்.

இதன் விலை ரூ. 3...

ஷெ அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி பீ பிக்ஹே... னிஃமானி இதன் விலை ரூ. ...

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

...ன்ற வெள்ளாட்டி

...மவ்அலா.

...ன்னும் தேசத்தில் தாருஸ்ஸலாம் என்...
... ஒரு பெரிய பணக்கார வியாபாரியின் மகலு...
...மான் என்பவர், தனது காலஞ்சென்ற தகப்பனா...
...ந்தச ஒஸியத்தை மறந்து, பாவங்கள், அழிச்சாட்டி...
... துணிந்து வீண்செலவுகள் செய்து, ஆஸ்தி முழுமை...
...ழந்து விட்டார். அவரிடம் தவத்துது யென்கிற வெள்ளா...
டியைத்தவிர யாதொரு வஸ்துவும் இல்லாமலாகிவிட்டது. அ...
சமயத்தில் அவ்வெள்ளாட்டி, தன்னை அவ்வூர் பாதுஷாவா...
ஹாரூன் ரஷீதுயிடம் விற்று தனக்குரிய கிரயம் பதினாயி...
தங்கக்காசு வாங்கிக் கொள்ளுமாறு, தனது நாயகன் பதருஸ்...
மானிடம் சொன்னாள். அதன்படி பதருஸ்ஸமான், பாது...
விடம் வெள்ளாட்டியைக் கொண்டுபோய், பதினாயிரம் தங்...
காசு கேட்க, பாதுஷா ஒரு சாதாரண வெள்ளாட்டிக்கு பதி...
யிரம் தங்கக்காசு கொடுக்க இயலாதென்றார். அதன்பேரில், ...
வெள்ளாட்டி சாதாரணமானவளல்லவென்றும், மார்க்க அறி...
களில் மிக தேர்ந்தவளென்றும், சந்தேகப்படில் சோதிக்குமா...
பதருஸ்ஸமான் சொன்னார். அப்பொழுது பாதுஷா, தன...
சபையிலுள்ள அறிவுள்ள உலமாக்களைப் பார்த்து, அவ்வெ...
ளாட்டியிடம் பார்க்க அறிவுகள் விஷயமாக கேள்விபோட்...
சோதிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த கிதாபு, அமீருல் முஃமினீன் சுல்தான் ஹாரூ...
ரஷீது றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் முன்னிலையில் உ...
மாக்களுக்கும் தவத்துதென்கிற வெள்ளாட்டிக்கும் நட...
ஸுவால், ஜவாபாகிய ஹதீது கிஸ்ஸாவைப் பொதிந்துள்ள...
யாவரும் இந்தக் கிஸ்ஸா ஹதீது முற்றும் படித்து அதன்ப...
அமல் செய்து வந்தால், அவர்களுக்கு மிகுந்த அறிவுகளு...
சவாபுகளும் உண்டாகுமென்பதில் ஐயமில்லை. ஆதலால் ஒ...
வொரு முஸ்லிமும் இக்கிதாபை வாங்கி படித்து பிரயோஜ...
டைவீர்களாக. இதன் விலை தமிழில் ரூ. 2—0-...

ஷை அறபுத் தமிழில் விலை ரூ. 2—8-...

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.